# நெருநல் உளனொருவன்...

## அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் நினைவுகளுடன்



பூபாலசிங்கம் புத்தகசாலை

நெருநல் உளனொருவன்......



அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம்

(03.06.1922 – 21.07.1982)

# நெருநல் உளனொருவன்...

## அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் நினைவுகளுடன்

பதிப்பாசிரியர்

**என். செல்வராஜா**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | நெருநல் உளனொருவன்:<br>அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் நினைவுகளுடன் |
| பதிப்பாசிரியர் | : | என். செல்வராஜா (நூலகவியலாளர், லண்டன்) |
| பதிப்பு | : | தை 2015 |
| வெளியீடு | : | அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் |
| இணை வெளியீட்டாளர் | : | குமரன் புத்தக இல்லம்<br>39, 36வது ஒழுங்கை கொழும்பு 06 |
| அச்சு | : | குமரன் அச்சகம், கொழும்பு - 06 |

சர்வதேச தராதர நூல் பதிவெண் - 978-0-9930143-1-4

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு.**

(திருக்குறள் 336)

**மு.வ. உரை**

நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

**பரிமேலழகர் உரை**

ஒருவன் நெருதல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து ஒருவன் நெருநல் உளனாயினான் அவனே இன்று இல்லையாயினான் என்று சொல்லும் நிலையாமை மிகுதி உடைத்து இவ்வுலகு - இவ்வுலகம் (ஈண்டு உண்மை பிறத்தலையும் இன்மை இறத்தலையும் உணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கும் உளவாயினும் சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கது என்பதாம்.)

**Translation**

Existing yesterday, today to nothing hurled!
-Such greatness owns this transitory world.

**Explanation**

This world possesses the greatness that one who yesterday was is not today.

# பதிப்புரை

இலங்கையின் தமிழ் நூல் விற்பனைச் சந்தையின் வரலாற்றைப் பதிவு செய்வதாயின் பூபாலசிங்கம் புத்தகசாலையின் வரலாறு அதில் தவிர்க்கப்பட முடியாததாகவிருக்கும். ஒரு தனி மனித வர்த்தக நிலையம் எவ்வாறு ஒரு சமூகத்தின் அடையாளமாகியது என்பதனை அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களது வாழ்க்கைச் சரிதையின் வாயிலாக எமது சந்ததியினர் அறிந்து கொள்வர்.

1922 ஜூன் மாதம் 03 ஆம் திகதி பிறந்த ஆர்.ஆர். பூபாலசிங்கம் 1982 ஜூலை 21 இல் தனது அறுபதாவது வயதில் சடுதியாக மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவர் அமரராகி முப்பது ஆண்டுகளைக் கடந்துவிட்ட இன்றைய நிலையில் அன்னார் பற்றிய ஆய்வுகள், வாழ்க்கை வரலாறுகள் ஏதும் வெளிவந்துள்ளதா என்று முப்பதாண்டுகாலப் பின்னோக்கிய தேடலை மேற் கொண்ட போது, எனது கைகளில் அமரர் பூபாலசிங்கத்தின் அந்தியேட்டியின்போது வெளியிடப்பட்ட நினைவுமலர் ஒன்றும், பின்னாளில் 2011 இல் பிரான்ஸிலிருந்து வி.ரி. இளங்கோவன் எழுதிய 'மண்மறவா மனிதர்கள்' என்ற கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறு கட்டுரையொன்றும், அதே ஆண்டில் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் வெளியிட்ட 'வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள்' என்ற நூலில் இடம்பெற்ற சிவா சுப்பிரமணியம் அவர்களின் கட்டுரையொன்றும் மட்டுமே கிட்டின.

1945 ஆம் ஆண்டு பூபாலசிங்கம் புத்தகசாலையை ஆரம்பித்து, அதனைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தெடுத்து, இடைப்பட்ட காலத்தில் மூன்று தடவைகள் தனது ஐந்து கடைகளை ஈனர்கள் தீக்கிரையாக்கியபோதும், தளராது பீனிக்ஸ் பறவையாக எழுந்து நின்று ஈழத்தின் தமிழ் நூல் விற்பனைச் சந்தையைத் தனது ஆளுமையின் மூலமும் கைப்பற்றி கற்றோரும், மற்றோரும் பயன்பெறத் திருப்திகரமான வழங்கலை மேற்கொண்டவர். அவரது பிள்ளைகளுக்கும் தனது அனுபவத்தைப் பாடமாகப் போதித்து வளர்த்தவர். அவர்கள் தந்தையாரிடம் பெற்ற அனுபவக்கல்வியே அவரளவில் முதுசொமாகி நின்று இன்று பூபாலசிங்கம் புத்தகசாலை ஈழத்துத் தமிழ்நூற் சந்தையின் முக்கிய பாத்திரமாக செழிப்புடன் அமைந்திருக்க வழிகோலியுள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது.

இத்தகையதொரு வர்த்தகப் பிரமுகர் - சுயம்புவாக வளர்ந்தெழுந்து விருட்சமாக வாழ்ந்து மறைந்த கதை, திருப்திகரமாகப் பதிவுக்குள்ளாக்கப்படவில்லை. அதனைச் செய்யவேண்டியவர்கள் - அவருடன் கூடிப்பழகியவர்கள், இன்றும் எமது சமூகத்தில் வாழ்கிறார்கள். அவர்களது காலத்திலேயே அமரர் பூபாலசிங்கம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படாமல், அதனை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்வதென்பது சமூகத் தவறாகும். இன்று

ஈழத்தின் சில முக்கிய வர்த்தகர்களின் வாழ்வும் பணிகளும் நூலுருவில் பரவலாகக் காணக்கிடைக்கின்றமையை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1963 இல் தொடக்கிவைத்த தேயிலை ஏற்றுமதி நிறுவனமான ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத்தின் அதிபர் தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரன் அவர்களின் வாழ்வும் பணிகளும் ‘அர்த்தமுள்ள அனுபவங்கள்’ (2011) என்ற நூலிலும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக உலகில் நன்கு அறியப்பட்ட வி.ரி.வி. பவுண் டேஷன் லிமிட்டெட் நிறுவன அதிபர் வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளையின் வாழ்வும் பணிகளும் ‘இதோ ஒரு வெளிச்சம்’ (1996) என்ற நூலிலும், இணுவில் அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் பொன்னையா நடராசா அவர்களின் வாழ்வும் பணிகளும் ‘அண்ணா பொன்ஏடு’ என்ற அண்ணா தொழிலக பொன் விழா ஏட்டிலும் (2009), மலையகத்தின் கண்டி மாவட்டத்தில் ஒரு பிரபல்யம் பெற்ற தொழில் அதிபரான அல்ஹாஜ் என்.எம். புஹார்தீன் அவர்களது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ‘மலையகத்தின் தொழிலதிபர்’ (1992) என்ற நூலிலும், திருச்சி, கல்கி பீடி நிறுவனத்தின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்தரானமையால் அந்த நிறுவனத்தின் பெயரையே தனதாக்கிக்கொண்டு வாழ்ந்த அமரர் கல்கி சின்னத்துரையின் வெற்றிகரமான வர்த்தகத்துறை வாழ்க்கையும் பொதுவாழ்க் கையும் ‘கல்கி சின்னத்துரை மலர்’ (2005) என்ற நூலிலும் காணக் கிடைக்கின்றது. அவ்வகையில் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறும் எதிர்காலத்தில் நூலுருவாக வேண்டும் என்ற வேணவாவுடன் இச்சிறு நூலை அன்னார் பற்றிய நினைவுப் பதிகைகளுடன் முப்பதாண்டுகள் கழிந்த நிலையில் உங்கள் முன்வைக்கின்றோம்.

இந்நூலில், அமரர் பூபாலசிங்கம் வாழ்ந்த காலத்தில் உடனிருந்தவர்கள் அவரின் மறைவின்போது வழங்கிய அஞ்சலிகளும் அவர் பற்றிய சில கட்டுரை களும் மீள்பிரசுரம் பெறுகின்றன. அரசியல்வாதிகள், பல்கலைக்கழக அறிஞர்கள், சமூகசேவையாளர்கள் என மூவகையினரும் தத்தம் மனப் பதிவுகளை அவரது மறைவின்போது பதிவுசெய்துள்ளனர். அவர்களது அனுபவப் பகிர்வுகளினூடாக அமரர் பூபாலசிங்கத்தின் வாழ்வை நாம் ஓரளவு ஊகித்துக்கொள்ள முடிகின்றது. திரு. சிவசுப்பிரமணியம், வி.ரி. இளங்கோவன், க.சி. குலரத்தினம், நா.க. சண்முகநாதபிள்ளை, வி. சபாநாதன், என். செல்வராஜா போன்றோரின் கட்டுரை களும் அவரது வாழ்க்கையை நமக்குச் சொல்லிவைக்கின்றன.

மீள்பிரசுரக் கட்டுரைகள் அனைத்தும் மூல நூலின் குறிப்பினை இறுதியில் தாங்கிவருகின்றன. இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகளை ஆக்கியோருக்கு எமது நன்றியையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**என். செல்வராஜா**
லண்டன்
21.7.2013

# பொருளக்கம்


பதிப்புரை vii

1. அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம்: சில நினைவுகள் 1
   *- என். செல்வராஜா*

2. தோற்றமும் வாழ்க்கை ஏற்றமும் 7
   *- நா. க. சண்முகநாதபிள்ளை*

3. வேதனை தந்த மறைவு 14
   *- தா. பாண்டியன்*

4. கொள்கைப்பிடிப்புள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர் 15
   *- எஸ். விஜயானந்தன்*

5. சரித்திரக் கதைச் செம்மல், முத்தமிழ் வித்தகர் 16
   *- டாக்டர் விக்கிரமன்*

6. தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் 18
   *- சிவா சுப்பிரமணியம்*

7. இறை பணிக்கே எம்மை இட்டுச் சென்றவர் 22
   *- வி. சபாநாதன்*

8. அறிவுப் பசிக்கு உதவிய ஆர்.ஆர். பூபாலசிங்கம் 25
   *- வி.ரி. இளங்கோவன்*

9. புத்தக வர்த்தகர் பூபாலசிங்கம் 30
   *- சைவப்புலவர் க.சி. குலரத்தினம்*

10. வடபகுதி முற்போக்கு அணியினருக்கு ஏற்பட்ட பேரிழப்பு 32
    *- இராஜா விசுவநாதன்*

11. இரக்கம் மிகுந்த பொதுநலப் பணியாளர் 34
    *- வெ. யோகேஸ்வரன்*

12. பூபாலுக்கு புரட்சிகர அஞ்சலி 35
    *- கே.பி. சில்வா*

13. எங்கள் தோழர் 38
    *- எம். சி. சுப்பிரமணியம்*

14. ஓர் இலட்சியவாதி 40
- **அ. வைத்திலிங்கம்**

15. எண்ணிய கருமந்தனை விரைவில் எழிலுறமுடிக்கும் கர்மவீரர் 41
- **பேராசிரியர் சு. வித்தியானந்தன்**

16. மனம் நெகிழும் அனுதாபங்கள் 42
- **பேராசிரியர் கா. சிவத்தம்பி**

17. அறிவுப் பசிக்கு உணவளித்தவர் 43
- **பேராசிரியர் க. கைலாசபதி**

18. அறிஞர்கள் புத்தகத்தை நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கியவர் 44
- **கா. கைலாசநாத குருக்கள்**

19. தமிழ்ப் புத்தக விற்பனைத்துறையில் வரலாறு படைத்தவர் 45
- **க. இ. க. கந்தசுவாமி**

20. நயினைத் தாயின் அருந்தவப் புதல்வன் 46
- **நா. குமாரசூரியர்**

21. உருவாக்கிய சேவைகளினால் அமர வாழ்வு பெற்றவர் 47
- **க. வே. பரமலிங்கம் ஜே. பி.**

22. மனிதகுல மாணிக்கம் 48
- **வித்துவான் மு. சபாரெத்தினம்**

23. அறிவுப்பசி தீர்க்கப் புத்தகசாலை அமைத்தார் 49
- **க. கனகராசா ஜே. பி.**

24. இணையற்ற சேவையாளர் 50
- **வே. கந்தையா, ஜே. பி.**

25. தொண்டனை இழந்து துடிக்கின்றோம் 51
- **கா. க. சிவசிதம்பரம்**

26. வாருங்கள் முதலில் அதைச் செய்வோம் 53
- **வி. ஆர். கே. இரத்தினசபாபதி**

1

# அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம்: சில நினைவுகள்

*என். செல்வராஜா*

ஈழத்தமிழர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை, அவ்வப்போது தனிநபர்களின் இடையறாத முயற்சியின்பாற்பட்ட வெற்றிகளினூடாகவே பரிணமித்துப் பிரகாசம் பெற்று வந்துள்ளன. வடபுலத்து, தென்புலத்து வர்த்தக நிறுவனங்களின் வரலாற்றை உற்று நோக்குவோமானால் எங்கோ ஒரு தொடக்கப்புள்ளியில் ஒரு தனிமனிதனின் பெயர் பொறிக்கப்பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரன் 1942 இல் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் வல்லநாடு என்ற கிராமத்தில் பிறந்தவர். 7 வயது வரை தமிழ்நாட்டில் வளர்ந்த இவர் 1949 இல் கொழும்புக்குச் சென்று புனித பெனடிக்ற் பள்ளியில் படித்து, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1959 - 1963 காலப்பகுதியில் கற்றுத்தேர்ந்து இளங்கலை வணிகவியல் பட்டம் பெற்றவர். தந்தை நவம்பர் 1963 இல் தொடக்கிவைத்த தேயிலை ஏற்றுமதி நிறுவனமான ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்று வளர்த்தவர். இன்று 49 நாடுகளுடன் ஏற்றுமதி உறவினைக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனம் இதுவாகும். இந்நிறுவனத்தின் ஆரம்பம் தெய்வநாயகம்பிள்ளை என்ற தனிமனிதனின் வியர்வையை உரமாகப்பெற்றே இன்று ஒரு பெரு விருட்சமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் வர்த்தகப் பிரமுகர்களிடையே பிரபல்யமானவர் வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக உலகில் நன்கு அறியப்பட்ட நிறுவனம் இவருடையது. இலங்கை அரசிடமிருந்து தேசபந்து விருதினைப் பெற்றவர் இவர். தமிழகத்தின் திருச்செந்தூர் மாவட்டத்தில், சாத்தான்குளம் அருகில் உள்ள சிற்றூரான பன்னம்பாறை இவரது பிறப்பிடமாகும். 1911 ஒக்டோபர் 7 இல் பிறந்த வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளையின் வாழ்வும் உழைப்பும் வி.ரி.வி. நிறுவனத்தின் உரமாகும்.

இணுவில் அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் பொன்னையா நடராசா அவர்களின் வாழ்வும் யாழ்ப்பாண மண்ணில் உருவாகி வளர்ந்த ஒரு கைத்தொழில் நிறுவனத்தின் வரலாறாகும். அண்ணாமலைப் பரிகாரியாரின் ஞாபகமாக அண்ணாமலை ஆயுர்வேத பற்பொடியின் உற்பத்தியுடன் ஆரம்பமாகி, அண்ணா என்ற பெயர் நிலைத்தது. யாழ்ப்பாணத்தின்

மற்றுமொரு கைத்தொழில் அதிபர் மில்க்வைற் கனகராசாவின் ஆதரவுடன் தளைத்து வளர்ந்து பல்வேறு கிளை நிறுவனங்களையும் சர்வதேச வர்த்தகத் தினையும் முன்னெடுத்துச் சென்ற அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் பொன்னையா நடராசா அண்ணா கோப்பியின் வரலாற்றின் பிதாமகராவார்.

இவ்வாறே யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு நிறுவனத்தின் பின்னாலும் ஒரு தனிநபரும் அவரது குடும்பமும் இனம்காணப்படுவது கண்கூடு.

அவ்வகையில் ஈழத்துப் புத்தக விற்பனைச் சந்தையின் முக்கிய பாத்திர மாக பூபாலசிங்கம் புத்தகசாலை அமைவதை எவரும் அறிவர். அதன் தாபகர் அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் வர்த்தகப் பிரமுகரான குடும்பப் பின்னணியிலோ, அதன் செல்வாக்கிலோ வர்த்தகத்துறையைத் தேர்ந்தவரல்ல. 1922 ஜூன் மாதம் 03 ஆம் திகதி நயினாதீவில் பிறந்த இவர் இளமையிலேயே தந்தையை இழந்தவர். இளமையின் ஏழ்மையால் பிழைப்புக்காக சிறு வயதிலேயே பத்திரிகைப் பையனானவர். ‘‘பூபாலசிங்க மவர்கள் சிறுவய திலிருந்து புத்தகத் தொழிலில் இறங்கி வளம் பல கண்ட சீமான்’’ என்று அந்நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தன் இரங்கலுரையில் குறிப்பிடுகின்றார். அவர் தொடர்ந்து ‘‘பூபாலசிங்கம் புத்தகசாலை தமிழறிஞர் சந்திக்கும் ஒரு அறிவுக் கூடமாகக் காட்சியளிக்கிறது’’ என்கிறார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது இரங்கலுரையில் ‘‘தோழமை நிறைந்த வாழ்க்கையொன்று முடிந்து விட்டது. அந்தரங்க சுத்தியுடன் பழகிக் கொண்ட வர்களுக்கு அவர் அன்பின் ஆழம் தெரியும். அந்த நட்புரிமையை அனுப வித்தவன் என்கிற வகையில் நான் அவரது இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாக இருக்கின்றேன். இங்கு இருக்கும் பொழுது தெரியாது, நான் யாழ்ப்பாணத்துக்கு வந்து, 751 பஸ்ஸால் இறங்கி, 764 க்குப் போவதற்கு முன் புத்தகக் கடைக்குள் எட்டிப் பார்க்கும் பொழுதுதான் அந்த வெற்றிடம் எனக்குப் புலப்படப்போகிறது’’ என்ற அவரது உணர்வுபூர்வமான வரிகளுள் ஒரு நட்பின் வலி புலப்படுகின்றது. ஆக, ஒரு சாதாரண ‘புத்தகப் பையன்’ (Paper Boy) தன் விடாமுயற்சியால் கற்றோரும் மற்றோரும் நட்புடன் மெச்சி நாடிடும் ஒரு அறிவியல் சாம்ராஜ்ஜியத்தின் மையமாக உருமாற்றம் பெற்ற வரலாறு தான் அமரர் பூபாலசிங்கத்தின் வரலாறு.

வறுமை காரணமாகப் பள்ளிப்படிப்பைத் தொடர முடியாமல் 1931 ஆம் ஆண்டில் தனது ஒன்பதாவது வயதில் பிறந்த மண்ணான நயினா தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து உறவினர்களின் உதவியால் T. தம்பித்துரை புத்தகசாலையில் ஒரு ஊழியனாகச் சேர்ந்து பத்திரிகைகளைச் சுமந்து சென்று பஸ்நிலையம், புகையிரதநிலையம் போன்ற சனக்கூட்டம் நிறைந்த இடங்களில் விற்பனை செய்வது இவரது ஆரம்பகால வேலை. பத்திரிகை

களை விற்பனை செய்வதுடன் அவகாசம் கிடைக்கும்போதெல்லாம் தான் விற்பனை செய்யும் பத்திரிகைகளை வாசித்துஅதன் மூலம் அந்த இளம் வயதிலேயே நாட்டு நடப்புகளை நன்கு தெரிந்துவைத்திருந்தார். தமிழகத்தின் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. (மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம்) அவர்கள் சிறுவயதில் ஏழ்மை காரணமாக 3 ஆம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை முடித்து நெசவாலையில் குழந்தைத் தொழிலாளியாகச் சேர்ந்து பின்னர் அச்சக மொன்றில் அச்சுக்கோப்பாளராகப் பணியேற்றவேளையில் தான் வாசிப்பை நேசித்தாராம். பின்னாளில் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் அவருக்கு கலாநிதிப் பட்டங்களை வழங்கின. தமிழகத்தின் ம.பொ.சி.யின் வரலாறு பல இடங்களில் அமரர் பூபால சிங்கத்தின் வரலாற்றுடன் பொருந்துகின்றது.

அமரர் பூபாலசிங்கத்திற்கு ஒரு அரசியல் வரலாறுமுண்டு.

இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி 1935 டிசம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கெனவே புரட்சி கர சிந்தனைகளைக் கொண்டிருந்த திரு. பூபாலசிங்கம் அவர்கள் லங்கா சம சமாஜக் கட்சியைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அறிந்திருந்தார். இக்காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் வடபுல பிரமுகராகவிருந்த சட்டத் தரணி சிற்றம்பலத்தின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சியின் பத்திரிகையான சமதர்மம் பத்திரிகைகளையும் அட்வகேற் சிற்றம் பலத்திடமிருந்து பெற்று விற்கத் தொடங்கினார். அப்பத்திரிகை விற்பனை யைத் தொழிலாகக் கருதாமல் பணியாகச் செய்தார்.

பதினாறாவது வயதில் - 1938 இல் மார்க்சிய சித்தாந்தத்தால் கவரப் பட்டு, பின்னர் இருபத்தொரு வயதில் - 1950 இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகிக் கட்சியை வடபுலத்தில் ஸ்தாபிப்பது முதல் வடக்கில் அதன் படிப்படியான வளர்ச்சியிலும், நெருக்கடியான காலகட்டங்களில் கட்சியைப் பாதுகாப்பதிலும் மகத்தான பங்களிப்பினை வழங்கியவராக இவர் சக தோழர்களால் விதந்து போற்றப்பட்டுள்ளார். இலங்கைக் கம்யூ னிஸ்ட் கட்சியின் கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தவர்களுள் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கமும் ஒருவர். மு.கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், சு. வே. சீனிவாசகம், நீர்வேலி கந்தையா ஆகிய தோழர் களுடன் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தாலேயே யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வலுவான ஒரு அடித் தளத்தைப் பெறக்கூடியதாக இருந்தது என்று தனது கட்டுரையில் சிவா சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடும் வரிகள் முக்கியமானவை.

அமரர் பூபாலசிங்கமும் மற்றைய தோழர்களும் யாழ்ப்பாணத்தில் கட்சிக் கிளையை ஆரம்பிப்பதற்காகச் செயற்பட்ட காலம் நாட்டில்

மார்க்சிசக் கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்கு ஆட்சியாளர்கள் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்ட காலப்பகுதியாகும். அப்போது போஸ்டர்களை ஒட்டுதல், கட்சிப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தடையுத்தரவு அமுலில் இருந்தது. தோழர்கள் கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர் ஆகியோருடன் இளைஞராக விருந்த பூபாலசிங்கம் அவர்களும் போஸ்டர்களை ஒட்டுவதில் ஈடுபட்டு காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டதுமுண்டு.

பூபாலசிங்கம் அவர்கள் சமசமாஜக் கட்சியின் வாலிபர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த வேளையில் கட்சியின் பிரச்சார ஏடான சமதர்மம் பத்திரிகையை அரசாங்கம் தடைசெய்திருந்த நிலையிலும் அதன் பிரதிகளை விற்பதை நிறுத்தவில்லை. இக்காலத்தில், ஒருநாள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பூபாலசிங்கம் சமதர்மம் பத்திரிகை விற்றுக்கொண்டிருப்பதைக் கண்ட ஏ. எஸ். பி. சிட்னி டீ. சொய்சா அப்பத்திரிகைகளைப் பறிமுதல் செய்ததோடு இவருக்குச் சவுக்கால் அடித்தார். அதன் தழும்பு அவரது மறைவு வரை அவரது உடலில் விழுப்புண்ணாக இருந்துள்ளது.

கட்சிப் பணியுடன் நிற்காமல் சமூக சீர்திருத்த விடயங்களிலும் அவரது பங்களிப்பு அதிகளவில் இருந்தது. நயினாதீவு அபிவிருத்திச்சபை, தீவுப்பகுதி மோட்டார்சேவை, அமுதசுரபி அன்னதான சபை, ஆகிய சமூக நலசேவைத் திட்டங்களின் உருவாக்கத்தில் இவரது பங்களிப்பு இருந்துள்ளது. தான் சார்ந்த கட்சி சார்பாக தாழ்த்தப்பட்டோரின் இந்து ஆலயப் பிரவேச நடவடி க்கைகளில் ஈடுபட்ட இவர், நயினாதீவு பிடாரி கோவில் வேள்வியை நிறுத்துவதில் உண்ணாவிரதமும் சத்தியாக்கிரகமும் மேற்கொண்டு இறுதியில் வெற்றி கண்டார். நயினாதீவு மணிபல்லவ தேவி பொது நிலைக் கழகத்தின் ஸ்தாபகர் களில் ஆர். ஆர். பியும் ஒருவர். அக்கழகமே பிற்காலத்தில் அமுதசுரபி அன்னதான சபையாகியது. இராமேஸ்வர ஆலயத்திற்கு இலங்கையில் உள்ள சொத்துக்களுக்கு அறங்காவலராகவும் இவர் நியமிக்கப்பெற்றிருந்தார்.

அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அரசியலில் காட்டிய ஈடுபாட்டுக்கு நிகராகவே அவரது ஈழத்துப் புத்தகச் சந்தை ஈடுபாடும் காணப்பட்டது. பத்திரிகை, புத்தகச் சந்தையில் நேரடியாக ஈடுபடும் நோக்கில் தனது 23 ஆவது வயதில் 1945 ஆம் ஆண்டிலே அவர் பூபாலசிங்கம் புத்தகசாலையை நிறுவினார். அது பின்னாளில் மூன்று தடவை தீக்கிரையானதும், அவரது ஐந்து கடைகள் எரிந்து சாம்பலாகியதும் கசப்பான வரலாறு. யாழ்ப்பாண நூலகம் 1981 ஜூன் 1 ஆம் திகதி எரியூட்டப்பட்ட அன்று அதே அரச கைக்கூலிகளால் பூபாலசிங்கம் புத்தகசாலையும் எரியூட்டப்பட்டதும் வரலாற்று நிகழ்வாயிற்று.

பூபாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தனது புத்தகச்சந்தையை விரிவாக்கிய முறை சிந்திக்கத்தக்கது. பெரும்பாலான ஈழத்து பொது நூலகர்கள் இன்று செய்துகொண்டிருப்பதைப் போன்று நாடி வருவோருக்குக் கேட்ட பத்திரிகை / புத்தகத்தை - இருந்தால் கொடுப்பதும் இல்லாவிட்டால் கைவிரித்து விடுவதும் அல்ல அவரது முறை. இன்று நவீன ஐரோப்பிய புத்தக நிறுவனங்கள் பரவலாகக் கையாளும் வியாபார தந்திரத்தை அந் நாளிலேயே பரிசோதித்து வெற்றிகண்டவர் அவர். வி.ரி. இளங்கோவன் அமரர் பூபால சிங்கம் பற்றிய தனது கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

ஒரு தடவை இலவசமாக வாசிக்க வரும் அன்றைய எழுத்தாளர்களை ஏளனமாக நகைத்த தனது ஊழியரிடம் ''தம்பியவை அவர்கள் இலக்கிய வாதிகள். எங்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள். நம்பிக்கையானவர்கள், மரியாதைக்குரியவர்கள். அவர்கள் எதை எடுத்து வாசித்தாலும் ஒன்றும் சொல்லாமல் பண்பாக நடந்துகொள்ளுங்கள்'' என்று சொன்னாராம்.

''பாலர் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர் வரை அங்காடி வியாபாரி முதல் அலுத்துப்போன தொழிலாளிவரை கேள்வி அறிவாலும், அவருடைய இலவச வாசிப்பு வசதியாலும் உலக, உள்ளூர் செய்திகளையும் அரசியல் விடயங்களையும் அசை போடுவார்கள். சிலவேளைகளில் அவருடைய புத்தகசாலைகளின் தாவாரங்கள் அரசியல் மேடைகளாகவும், இலக்கிய மன்றங்களாகவும், பட்டி மன்றங்களாகவும், கவியரங்கங்களாகவும் மாறும். இதிலே வருவோர் போவோர் எல்லோருமே பங்குபற்றுவர்'' என்று தனது கட்டுரையில் நயினாதீவு மகாவித்தியாலய அதிபராயிருந்த நா.க. சண்முக நாதபிள்ளை குறிப்பிடுவதையும் இங்கு கவனத்திற்கெடுக்கலாம்.

ஒரு சமூகத்தில் வாசிப்புக் கலாச்சாரத்தை ஏற்படுத்தாது போனால் அச்சமூகத்தினரிடையே புத்தக வியாபாரம் செய்யமுடியுமா? இதை அமரர் பூபாலசிங்கம் தெளிவாகவே புரிந்துகொண்டிருந்தார். வாசிப்பின்பால் ஆர்வத்தை ஏற்படுத்துவதில் அவர் கைக்கொண்ட யுக்தியே இலவச வாசிப்பு வசதி. இன்று லண்டனில் பிரபல்யமான வோட்டர்ஸ்டோன் (waterstones) புத்தக நிலையத்தில் வீட்டு வரவேற்பறையில் இருப்பதுபோன்ற வசதியான இருக்கைகளை வைத்து வாசகர்களைக் கவர்ந்திழுப்பதற்காக ஏராளமாகச் செலவிடுகிறார்கள். மணிக்கணக்கில் இருந்து வாசிப்பவர்கள் - பின்னர் தேர்ந்த நூல்களை வாங்கிச் செல்கிறார்கள்.

எமது இளஞ்சிறார்களிடையே வாசிப்புக் கலாச்சாரம் அருகி வருவதாகக் குற்றஞ்சுமத்தும் கல்வியியலாளர்கள், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களில் எத்தனை வீதத்தினர் தத்தமது பாடவிதானம் தவிர்ந்த பொது வாசிப்பில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற கேள்வியை இரகசியமாகக் கேட்டு வைத்தால் அருகிவரும் வாசிப்புக் கலாச்சாரத்தின் சூட்சுமம் புரிந்துவிடும்.

எனது முதலாவது நூலகப்பணி சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் தான் ஆரம்பமானது. தென்னிந்திய ஜனரஞ்சக வார இதழ்கள் அனைத்தையும் இணுவிலில் உள்ள ஒரு சிறிய புத்தகக்கடையில் தான் ஓடருக்குப் பெற்றுக்கொள்வது வழக்கம். வாராந்தம் தொடர்கதைகளை வாசிக்கும் ஆசிரியர் மாணவர்களுக்கு (குறிப்பாக ஆசிரியர்களுக்கு) அச் சஞ்சிகைகளை ஒழுங்காகப் பெற்றுக்கொடுப்பது நூலகரின் கடமைகளுள் ஒன்று. ஒரு தடவை ஏதோ காரணத்தால் குமுதம் இதழ் ஒன்று தவறிவிட்டது. அந்த இணுவில் புத்தகக் கடைக்காரர் - அது அவரது தவறாக இருந்தும்கூட - கையை விரித்துவிட்டார். நான் அந்த வார இறுதியில் பூபாலசிங்கம் புத்தக சாலையில் - அவரது மகன் ராஜனுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். (அமரர் பூபாலசிங்கத்தின் புத்திரர்களான ஸ்ரீதர்சிங்கும், ராஜனும் நூலகர் என்ற தொழில்துறைக்கு அப்பால் எனது நட்புக்குரியவர்கள்.) தற்செயலாக தவற விடப்பட்ட சஞ்சிகை பற்றிப் பிரஸ்தாபித்தபோது தந்தையின் ஆணையின் படி பழைய புத்தகக் கட்டுக்குள்ளிருந்து நான் கேட்ட குமுதம் பிரதியை எடுத்துத் தந்தார். அதற்கான பணத்தைக்கூட வாங்க மறுத்துவிட்டார். ஒன்றரை மாத இடைவெளியின் பின்னர் இராமநாதன் கல்லூரிக்கு தவறவிடப்பட்ட குமுதம் பிரதி சென்றடைந்தது.

அமரர் பூபாலசிங்கம் தனது புத்தக வியாபாரத்தை வாடிக்கையாளரின் நம்பிக்கைக்குரிய வகையில் நடத்துவதில் வெற்றிகண்டவர். படைப்பாளிகள், எழுத்தாளர்கள் இருவருக்கும் வாசகர்களுக்கும் இடையில் ஒரு உறவுப் பாலம் அமைத்தவர். அவரைச்சுற்றி எப்போதும் ஒரு எழுத்தாளர் கூட்டமோ, அரசியல்வாதிகளின் கூட்டமோ இருந்துகொண்டே இருக்கும். அவரது இருக்கையில் தனியனாக அவரைச் சந்தித்த வாய்ப்புகளே குறைவு எனலாம். நூலகங்களுக்கான புத்தகத் தேர்வுக்காக அவரது இல்லத்துக்கு அடிக்கடி செல்லநேர்வதுண்டு. எப்போதும் வீடு முழுவதும் புத்தகச் சிதறலாகவே காணப்படும். முழுக்குடும்பமுமே எனது நூல்தேர்வில் பங்கேற்கும் இனிய சந்தர்ப்பங்களும் இடையிடையே இருக்கும். வாழ்வின் இனிய நினைவுகள் அவை. அன்று என்னை ஆட்கொண்ட அந்த நட்பும் மதிப்புமே என்னை அமரரின் முப்பதாண்டுகால முடிவில் இக்கட்டுரையை முப்பதாண்டுகளுக்கு முந்தைய அதே உணர்வுடன் எழுதத்தூண்டியதெனலாம்.

ஈழத்தமிழரின் அறிவுத்தேடலுக்கும் வாசிப்பு விருத்திக்கும் பூபால சிங்கம் நிறுவனம் தொடர்ந்தும் அதன் தாபகரின் வழியொற்றித்தன் சேவையை வளம்படுத்தி ஈழத்துப் படைப்பாளிகளினதும் எழுத்தாளர் களினதும் நம்பிக்கை நட்சத்திரமாகத் தன் எழுபதாவது அகவையை 2015 இல் எதிர்கொள்ள வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

29.7.2012

2

# தோற்றமும் வாழ்க்கை ஏற்றமும்

*நா. க. சண்முகநாதபிள்ளை*
(*அதிபர், நயினாதீவு மகாவித்தியாலயம்*)

முன்னைப் பழமையும், பின்னைப் புதுமையும் பெற்று விளங்குவது நயினாதீவு. அன்னை நாகபூஷணியின் அருளார் அமுதம், ஆர்த்த பிறவித் துயர்கெட அடியார் ஆடும் தீர்த்தமாகத் திருவருள் கூட்டுவதை எவரும் அறிவர். அன்னையின் திருவருள் நிழலிலே தினமும் திழைக்கும் நயினை மக்கள், தூய அன்னையின் துணையினால் கலையாத கல்வியும், கன்றாத வளமையும் பெற்று வாழ்கின்றனர். இந்தப் புனித பூமி புறந்தந்த பெருந்தகை யாளருள் ஒருவர் தான் ஆர்.ஆர். பாலசிங்கம் அவர்கள். நயினாதீவுச் சாமியார் திருப்பெருகு முத்துக்குமாரசாமி அவர்கள், ஈழத்து இல்லற ஞானி உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள், சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ஐ. கயிலாசநாதக் குருக்கள், பாரதி அடியான் ப.கு. சரவணபவன், பெரியவாத்தி யார் என்று அழைக்கப்பெறும் திரு. ச. நா. கந்தையா அவர்கள், ஆகியோரின் ஆசிகளினாலும், அன்புகெழுமிய நட்பினாலும் வளர்க்கப் பெற்றவர்தான் திரு. ஆர்.ஆர். பாலசிங்கம் அவர்கள்.

இளமையிலேயே துடிப்பும் மிடுக்குமுள்ள இளைஞனாக இருந்த இவர் சிறுபராயத்திலே தமது தந்தையாரை இழந்தார். இது அவருக்கு ஒரு பேரிழப்பாக இருந்தது. தந்தையை இழந்த இவருக்கு பாரிய குடும்பப் பொறுப்புக்கள் இருந்தன. புரட்சி எண்ணங்கள் ஒரு புறம், வறட்சியான ஏழ்மை வாழ்க்கை மறுபுறம். இவருடைய மனமாகிய கொடி பூமியிலே விழுந்து சின்னாபின்னமாக ஒடிந்து கனி தர வகையற்றுக் கிடந்தது. இனி யேதும் தமக்கு வாழ்வு வருமோ எனக் கருதி ஏங்கினார். ‘அரும்பு மலராகிய பின்னர் தான் வண்டுகள் தேன் உண்ணுவதற்கு ரீங்காரம் செய்து வருகின்றன. அவ்வாறே எண்ணங்களும் செயலாகும் போது தான் புகழ் ஒருவனைத் தேடி வருகின்றது’ என்றார் ஒரு அறிஞர். எண்ணி, எண்ணியாங் கெய்தும் மனத்திண்மை பூபாலசிங்கம் அவர்களை ஒரு கரும வீரனாகப் பிற்காலத்திலே ஆக்கியதில் வியப்பில்லை.

இளமையில் கற்க முடியாத மனவேதனையுடன், குடும்பப் பாரத்தைத் தாங்குவதில் பல உடல் உள வேதனைகளையும் தாங்க வேண்டியவராய்

1931 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து, உற்றோரும் மற்றோரும் சிறு உதவிகள் செய்ய திரு. T. தம்பித்துரை அவர்களுக்கு பத்திரிகை விற்பனை யாளனாகப் பணியாற்றினார். தினசரி 21 சதம் உழைத்து வந்தார். அக்காலத்தில் அறிவறிந்த பெரியோர்கள் வீட்டிற்குப் பத்திரிகை கொண்டு செல்வதால் அக்கால அரச அதிபர் டைசன், கலாநிலையம் உருத்திர கோடீஸ்வரக் குருக்கள், யோகர்சுவாமிகள், திருப்புகழ்ச்சாமி, வடிவேலுச்சாமி, அளுக் கடைச் சுவாமியார், ஆகியோரின் நயன தீட்சைகளும் இவருக்குக் கிடைத்தன. கூடு மெய்த்தொண்டர் குழாத்துடன் கூடியிருந்த இந்த அனுபவத்தின் மகத்து வத்தை இறக்கும் வரை நெஞ்சில் நிறுத்தி மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடைந்து வந்தார்.

பத்திரிகை விற்பனைப் பணியாளராக இருந்தமையால் உலக அறிவை அவர் வளர்த்துக் கொண்டார். 1917 இல் நடந்த சோவியத் ஒக்ரோபர்ப் புரட்சி பற்றி அவர் பெற்ற அறிவு, இந்திய விடுதலை இயக்க எழுச்சி, பஞ்சாப் படுகொலை, உப்புச் சத்தியாக்கிரகம், சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் ஆகியன இவரை வெகுவாகக் கவர்ந்தன.

1938 ஆம் ஆண்டு இவர் இலங்கை சமசமாசக் கட்சியில் சேர்ந்தார். அதனால் தோழர் டாக்டர் விக்கிரமசிங்கா, கொல்வின் ஆர்.டி. சில்வா, என். எம். பெரேரா ஆகியோரின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இதன் பின்னர் ஹன்டி பேரின்பநாயகம் தலைமையிலான இலங்கை வாலிபர் சங்கத்திலும் (Jaffna Students' Congress) தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் காலனித்துவம், நாசிசம், பாசிசம், பிரபுத்துவம், முதலாளித் துவம் என்பவற்றை எதிர்க்கும் சக்திகளோடு சேர்ந்தார். 4 ஆவது சர்வதேசியம் என்னும் றொஸ்கீத வாதம் தலையெடுத்தபோது கம்யூனிஸ்டுகள் சம சமாசக் கட்சியிலிருந்து வெளியேறினர். 1943 யூலை 3 ஆம் திகதி 91 ஆம் இலக்கம் கொட்டா றோட், கொழும்பு என்ற இடத்தில் பொதுவுடைமைக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட சமயம் இவரும் கூட்டத்தில் பங்கு கொண்டார். அன்றி லிருந்து பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளியாகத் தொண்டாற்றத் தொடங் கினார். திரு. துரைசிங்கம், எஸ்.என். கந்தசாமி, இராமநாதன் நாயர், சங்கர் பிரேம்லால், குமாரஸ்ரீ, அரி அபயகுணவர்த்தனா, எம்.டீ. மென்டிஸ் ஆகியோர் இவருக்கு வழிகாட்டிகளாயினர். அதனைத் தொடர்ந்து பீற்றர் கெனமன், காத்திகேசு மாஸ்டர், ஏ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், கந்தையா ஆகியோரின் நட்புறவு வளர்ந்தது. திரு பூபாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் தோழர் அட்வகேட் சிற்றம்பலம், தர்ம குலசிங்கம், நடேசன், சிவசிதம்பரம், துரை ராசசிங்கம், எம்.சி. சுப்பிரமணியம்,

ஆகியோரின் நட்பும், தொழிலாளர் சங்கங்களில் ஈடுபாடும், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக் கழகப் பங்களிப்பும் இருந்தது. குறெசற் தம்பையா,நேசையா மாஸ்டர் ஆகியோரின் இல்லங்களில் நடைபெறும் வேதாந்த வகுப்புகளுக்கும் சென்று வந்தார்.

இக்காலத்தில் மூடநம்பிக்கைகள், சமூகக் குறைபாடுகள் ஆலயங்களில் பலியிடுதல் போன்றவற்றைத் தீவிரமாக எதிர்த்துப் போராடினார். முதன் முதலில் அவருடைய போராட்டம் பிறந்த ஊராகிய நயினாதீவிலே தொடங்கி யது. நயினாதீவு தெற்குத் தில்லைவெளியிலுள்ள பிடாரி கோவிலிலே வருடமொருமுறை வேள்வி நடாத்தப் பெறுவது வழக்கம். இந்த வேள்வியின் போது ஆட்டுக் கடாக்கள், கோழிகள் போன்றவற்றைப் பலியிடுவது வழக் கமாக இருந்து வந்தது. 1947 ஆம் ஆண்டளவில் நயினாதீவில் ஆலயப் பிரவேசத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும், பலியிடுதலை நிறுத்துவதற் காகவும் பூபால் அவர்கள் போராட்டங்களை நடாத்தினார். அப்போதைய கிராம விதானையார் திரு. கா.க. சிவசிதம்பரம் அவர்கள், திரு க. சோம சுந்தரம் ஆசிரியர், திரு. ஆ.சி. நடராசா அவர்கள் ஆகியோரின் ஒத்துழைப் புடன் பிடாரி கோவிலில் நடத்தப்பெற்று வந்த பலியிடுதல் வழக்கத்தை முற்றாக ஒழிப்பதில் பூபால் அவர்கள் அவ்வாண்டில் வெற்றி கண்டார். அடுத்த ஆண்டில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஹரிஜன ஆலயப் பிரவேசமும் வெற்றிகரமாக நடந்தேறியது.

நயினை நாகபூசணி அம்மன் திருவிழாக் காலங்களில் வரும் அடியார் களுக்கு குடிநீர் வசதி, உணவு வசதி, போக்குவரத்து வசதி ஆகியவற்றை வழங்குவதிலும் தீவுப்பகுதி அபிவிருத்தியிலும், ஏனைய ஸ்தாபனங்களோடு தனித்தும் ஒருமித்தும் நின்று தீவிரமாக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்தார்.

ஆரம்பத்தில் ‘மணிபல்லவதேவி பொது நிலைக்கழகம்’ என்ற ஒரு கழகத்தை நயினாதீவில் ஆரம்பித்தவர்களுள் இவரும் ஒருவராவர். இக்கழகம் நயினாதீவுச் சாமியாரினதும் திரு. க. இராமச்சந்திரா அவர்களினதும் ஆசியைப் பெற்று தன்னாலான பணிகளை அடியார்களுக்குச் செய்தது. சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா ஆகிய தினங்களில் கவளங் கவளமாக அடியார்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். திருவாளர்கள் நா. பொன்னுத்துரை, வே. சுந்தரம்பிள்ளை, நா. கணபதிப்பிள்ளை, க.கனகசபாபதி, எஸ்.ஆர். சின்னத் துரை, வே. சங்கரப்பிள்ளை, த. நாகேசு, அ.சி. நல்லையா, அ. கந்தையா, கு. பாலசுப்பிரமணியம், வே.க. கு நல்லையாபிள்ளை, க.வே. பரமலிங்கம், ப. சரவணபவன், வே. கந்தையா, ச.நா. கந்தையா, திரு. நா. விசுவலிங்கம் ஆகியோர் இக்கழகத்தை வளர்த்தனர் எனலாம். இதுவே பிற்காலத்தில்

அமுதசுரபி அன்னதான சபைக்கு அத்திவாரமாகியது என்பதை மறுக்க முடியாது. இக்கழகம் நயினை நாகமணிப் புலவருக்கு முதன் முதலில் விழா எடுத்ததோடு பேசும் படக்காட்சியையும் கிராம மக்களுக்கு அறிமுகப் படுத்தியது. இது நடந்தது. 1948 ஆம் ஆண்டு. அவ்வாண்டில் மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்காக ஒரு அஞ்சலிக் கூட்டம் நயினா தீவில் பிரம்மஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. பிறந்த மண்ணில் முதன் முதலாக பூபாலசிங்கம் அவர்கள் தமது கன்னிப் பேச்சை இம்மேடையில் நிகழ்த்தினார். அதன் பின்னர் நயினாதீவு தெற்கில் ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் நிறுவுவதில் ஆர்வம் கொண்டு அதற்காகப் பாடுபட்டு பல பெரும் விழாக்களையும் கொண்டாடி, தமிழ்நாட்டிலிருந்தும், ஈழத்திலிருந்தும் பேச்சாளர்களைத் தருவித்து எழுச்சியை உண்டாக்கினார்.

யாழ்ப்பாணத்தில் புதினப்பத்திரிகை விநியோகித்த காலத்தில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடந்தது. புரட்சிக் கருத்துக்களைப் பரப்பும் செய்தித்தாள்களுக்குத் தடை விதித்திருந்த காலம் அது. ஒளித்தும், மறைத்தும் அவற்றை விற்பதில் இவர் வல்லவராக இருந்தார். ஒரு நாள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் அப்பத்திரிகைகளை விற்றபோது பொலிஸ் அதிகாரியின் சவுக்கடிக்கு இலக்காகினார். இறக்கும்வரை அந்த அடியின் தழும்புகள் அவருடைய முதுகில் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் உள்ள தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாநில சுயாட்சி ஒன்றே ஏற்றது என்பதில் ஆணித்தரமாக இருந்து வந்தார். சைவ ஆலயங்களில் பூஜை செய்வதற்கு ஒழுக்கமும், சீலமுமுடைய-எவரும் தகைமை பெறலாம் என்றும், அதற்கென ஒரு குலமும் கோத்திரமும் இருக்க வேண்டியதில்லை என்பது இவருடைய கருத்து. சைவ அறநிலை யங்களுக்கென ஒரு பாதுகாப்புச்சபை இலங்கையிலே உருவாக்கப்பட வேண்டுமெனப்பாடுபட்டார். நாவலருக்கு மணிமண்டபம் எழுப்ப வேண்டும் என்ற செயற்பாடு ஆரம்பித்த காலத்தில் பலர் எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்ட போது - நாவலருக்கு மணிமண்டபம் கட்டாயம் என்பதில் உற்சாகமாக நின்று வாதிட்டவர் திரு. பூபாலசிங்கம் அவர்கள். இராமேஸ்வரம் ஆலயத்திற்கு இலங்கையில் உள்ள சொத்துக்களுக்கு அறங்காவலராகவும் இவர் நியமிக்கப் பெற்றார்.

காணியற்ற மக்களின் பிரச்சினை, மாணவ சமுதாய வளர்ச்சி, குடிநீர் வசதி ஆகியவற்றைத் தீர்ப்பதில் - யாழ்ப்பாணப் பகுதியிலும் இவர் பாடு பட்டு வந்தார். இவருடைய சமூக சேவை மனப்பான்மையை அறிந்த அரசு இவருக்கு ஜே.பி. பட்டம் வழங்கிக் கௌரவித்தது. பொதுவுடைமைச் சித்தாந் தங்களை மக்கள் நலவுடைமைக்காகப் பயன்படுத்துவதில் தமது செயல் வீரத்தை

எல்லா மட்டத்திலும் பசுமரத்தாணி போல் பதிய வைத்தார். உலகில் தாழ்த் தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்ட போதெல்லாம் அதற்குக் குரல் கொடுக்க இவர் தயங்கியதில்லை. அரசின் தடையையும் மீறி வியட்னாம் மக்களின் உரிமை களுக்காக யாழ்ப்பாணத்தில் இவரின் தலைமையில் நடந்த மாபெரும் ஊர்வ லத்தை மறக்கமுடியாது. பாட்டாளி வர்க்கத்திற்காகக் குரல் கொடுத்ததற்காக இவர் சிலகாலம் சிறைவாசமும் அனுபவித்தார்.

முன்பொரு சமயம் இவர் நோய்வாய்பட்டிருந்த காலத்தில் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைத் தவறாக ஒரு பிரபல சிங்களப் பத்திரிகை வெளியிட்டது. அதனால் இவரைச் செத்துப் பிழைத்த பாலர் என்றும் அழைப்பர். ‘கோழைகள் வாழ்நாள் முழுவதும் செத்துப் பிழைக்கிறார்கள் ஆனால் வீரன் மரணத்தை வாழ்வில் ஒரு முறைதான் தழுவி வீர மரணம் அடைகிறான்’ என்றார் செகசிற்பியர் (ஷேக்ஸ்பியர்). அவ்வாறே பூபாலர் வீரமரணம் அடைந்துவிட்டார்.

ஆனால் அவர் விட்டுச் சென்ற புத்தகக் களஞ்சியமும், அவருடைய செயற்பாடுகளும் செல்வ மக்களின் ‘இவர் தந்தை என்நோற்றான் கொல்’ என்ற சிறந்த பண்பாடும் ‘எழுமையும் ஏமாப்புடையதாய்’ நின்று நிலைக்கும். திரு. பூபால் அவர்கள் ஒரு நடமாடும் நூல் நிலையம். எல்லாத்துறைகளிலும் பாண்டித்தியம் உடையவர். பொல்லாத பகைவரையும் நெஞ்சத்து அகமுருக வைக்கும் பண்பாளர். பின்னே திரிந்து எல்லோரையும் தோழர்களாக ஆக்கு வதில் நண்பனாய், நல்லாசிரியனாய், அன்பனாய், இன்பமாய் இளநகை பூத்து எப்போதும் இனியனாய் எல்லோர்க்கும் நல்லவராய் இருந்தார்.

அவருடைய நிறுவனங்களும் அவருடைய இல்லமும் அடையா வாயில்களை உடையன. அவையெல்லாம் புத்தக ஆலயங்கள். சமதர்மக் கோயில்கள். ஊருணி நீர்நிறைந்தது போல அந்தப் பேரறிவாளன் திருவாகிய புத்தகச் செல்வம் எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் பயன் மரம் பழுத்தாற் போலப் பயன் பெற்றது. பாலர் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர் வரை அங்காடி வியாபாரி முதல் அலுத்துப்போன தொழிலாளிவரை கேள்வி அறிவாலும், அவருடைய இலவச வாசிப்பு வசதியாலும் உலக, உள்ளூர் செய்திகளையும் அரசியல் விடயங்களையும் அசைபோடுவார்கள். சில வேளைகளில் அவருடைய புத்தகசாலைகளின் தாவாரங்கள் அரசியல் மேடைகளாகவும், இலக்கிய மன்றங்களாகவும், பட்டிமன்றங்களாகவும், கவியரங்கங்களாகவும் மாறும். இதிலே வருவோர் போவோர் எல்லோருமே பங்குபற்றுவர். பல விடயங்களில் தெளிவும் விரிவும் பெற்றுச் செல்வர். அமைதியாக இருந்து தமது அலுவல்களைக் கவனித்துக் கொண்டும் அட்டா வதானமாக அங்கு நடக்கும் கலந்துரையாடலுக்குக் காது கொடுத்துக்

கொண்டும் கணினியின் வேகத்தில் கருமமாற்றுவார் பூபால். இறுதியில் இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் எல்லோருடைய அரங்கு களையும் முடித்து வைப்பார். அவற்றைத் தேவ வாக்காகக் கருதித் திருப்தி யோடு திரும்புவார்கள்.

அவருடைய தோழர்கள் வாடிவதங்கும் வெயிலிலே, அவசர நரக வேதனையிலே ஓடி ஆடித் திரிவோருக்கு வெயிலுக்கு ஏற்ற நிழலாகவும் வீசும் அறிவுத் தென்றல் காற்றாகவும் இவருடைய பெரியகடைப் புத்தக ஆலயம் மிளிர்கின்றது. அது ஒரு அறிவு விருட்சம். ‘வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி’ என்ற பாரதியின் கனவை நினைவாக்கிய கால்கோள் நிலையம் - யாழ். நூல் நிலையத்தை ஒரு முறைதான் எரித்தார்கள். இந்த அறிவு நிலையத்தை மூன்று முறை எரித்தார்கள் - கடை எரிந்து கொண்டி ருந்தது. அனுதாபம் தெரிவிக்க வீட்டிற்கு வந்தோருக்கு அன்னதானம் நடந்தது. அர்த்தராத்திரியில் அவர் வீட்டில் ஒரு பெரிய கூட்டம். அத்தனை பேரையும் வெளியில் விட்டால் அவர்கள் உயிருக்கு ஆபத்து எனக் கருதி அங்கேயே தங்க வைத்து அவர் தம் அருமருந்தனைய மனையாளும், பிள்ளைகளும் ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்தனர். ‘முன்னையிட்ட தீ முப்புரத்திலே, அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே, பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே, இப்போ இட்ட தீ வட இலங்கையிலே’ என்ற வரிகளை முணுமுணுத்தபடி ‘கொடுத்தவனே எடுத்துக் கொண்டான் மீண்டும் கொடுப்பான்’ என்று சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தார். பூபால் அவர் களுக்கு மாக்சிஸச் சித்தாந்தங்களில் எவ்வளவு பற்றுப்பிடிப்பு இருந்ததோ அதேயளவு பற்றும் பிடிப்பும் பாரதியின் பாடல்களிலும், சைவ சித்தாந்தக் கருத்துக்களிலும் இருந்தது. ஆனால் ‘கலையுரைத்த கற்பனைகளே நிலை யெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும்’ என்று அவர் போராடினார். ‘கிராயுகம் எழுகமாதோ’ என்ற பாரதியின் அடிகளை அடிக்கடி உச்சரிப்பார். மனத்திலே மாசில்லாமல் வாழ்தல் ஒன்றே அறமென வாழ்ந்தவர்- சக்தி உபாசகர் - சக்திக் கூத்தாடியவர்.

தமிழ் நாட்டிலே உள்ள எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், பிரசுரால யங்கள் மத்தியில் பெரும் மதிப்புப் பெற்றவர். அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது சிலம்புச் செல்வர், முதல்வர் M.G.R. , கலைஞர் ஆகி யோரைக் கண்டு வந்தார். இரண்டு முறை சோவியத் நாட்டுக்குச் சென்று திரும்பினார். பிறநாட்டில் இருந்து வந்த பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந் தவர்கள் அவர் தம் இல்லத்தில் சென்று அகமும் புறமும் மலர்ந்து செல்வர். தாம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த தோழர் விக்கிரமசிங்காவுடன் 1981 இல் சோவியத் நாட்டிற்குச் சென்றார். எதிர்பாராத விதமாக விக்கிரம

சிங்கா அவர்கள் சோவியத் நாட்டில் காலமானது இவருக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. சோகமே உருவாக அவருடைய பூதவுடலைத் தாங்கி வரும் நிலையில் தாய்ப்பசுவை இழந்த கன்றுபோல் வேதனையடைந்தார். சென்ற இடங்களிலெல்லாம் அவருடைய இலட்சிய முத்திரையைப் பொறிக்க அவர் தவறியது கிடையாது. அவர் உயிர் பிரிந்து செல்வதற்குச் சற்று முன்பு கூட அவர் பேசிய சிந்தனைகள் ஞானிகளுடைய போதனைகளைப் போல இருந்ததை தோழர்களும் நண்பர்களும் அறிவர். ''எடே விரைவில் என்னைச் சிவப்புக் கொடியால் மூடிக்கொண்டு போகப்போறீர்கள்'' என்றார். ஆம் சிவப்பு, அதுதான் கருணையின் மறு நிறம்.

*'உதிக்கின்ற செங்கதிர் - உச்சித் திலகம் உணர்வுடையோர்*
*மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை*
*துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன*
*விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழுத்துணையே'*

என்ற சக்தியின் செவ்வண்ணச் சோதியை அபிராமிப் பட்டர் வியந்து போற்று கின்றார். சக்திக் கூத்தாடிய பூபால் அவர்கள் அன்னையின் கருணை வடிவமான செவ்வண்ணக் கொடியில் சங்கமமானது பொருத்தமானதே.

*'பொது உடமை ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை'*
*'மாகாளி பராசக்தி உருகிய நாட்டிற் கடைக்கண் வைத்தாள் - அங்கே*
*ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி கொடுங்கோலன் அலறி-வீழ்ந்தான்'-*
*..... பாரதி.*

மரணம் நிச்சயமானது தான் - என்றாலும் பூபாலரின் மரணம் எம்மை யெல்லாம் ஆழாத் துயரில் அமிழ்த்திவிட்டது. அவர் ஒரு அதிசய மனிதர் - அபாரமான ஆளுமையுடையவர். என் செய்வது 'எல்லாம் எப்பவோ முடிந்தாயிற்று' 'ஒரு துன்பமும் இல்லை'அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

(நன்றி: 'உயர்திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் ஜே.பி. நினைவுமலர்', 1982)

# 3

# வேதனை தந்த மறைவு

*தா. பாண்டியன்*

தோழர் பூபாலசிங்கம் காலமானார் என்ற துக்கச் செய்தியை இலங்கை மண்ணில் இறங்கியவுடன் கேட்க நேரிட்டது. எனது துரதிர்ஷ்டமாகும். தோழர் பூபாலசிங்கத்தை ஒருமுறை சென்னையில் சந்தித்துள்ளேன். கடசியின் பத்திரிகை, புத்தகங்களின் அதிக அக்கறை காட்டி வந்தார்.

யாழ்ப்பாணத்தில் அவருடைய புத்தகக் கடை எரியூட்டப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்து நாங்களும் கொதிப்படைந்தோம். இனி கடையை இவர் நடத்துவரா? என்ற ஐயமும் எழுந்தது.

தோழர் கல்யாணசுந்தரம் எம்.பி. அவர்கள் ஈழத்திற்குச் சென்று திரும்பிய போது செய்திகளையும், சில புகைப்படங்களையும் கொண்டு வந்தார். எரியுண்ட கடையினைப் படத்தில் பார்த்தோம். ஆனால் இன்னொரு படத்தில் புன்முறுவலுடன் கல்யாணசுந்தரத்துடன் உரையாடிக் கொண்டிருந்த காட்சியையும் பார்த்தோம். கடையை எரித்தவர்களால் அவரது நெஞ்சுறுதியைப் பொசுக்க முடியவில்லை என்பது கண்டு மகிழ்ந்தோம். ஆனால், நான் வந்து பார்க்கும் முன்...!

அவரது இல்லத்திற்குச் சென்று மாலையிடப்பட்ட அவரது படத்தையே காண நேரிட்டது. சோகமே வடிவெடுத்து அமர்ந்துள்ள அவரது துணைவியாரையும், குழந்தையையும் பார்ப்போருக்கு நெஞ்சு பதறுகிறது. தேறுதல் சொல்ல சொற்கள் கிட்டவில்லை.

முற்போக்கு நூல்களையும், செய்தித் தாள்களையும் விற்பனை செய்வதன் மூலம் நற்பணி புரிந்து வந்தவரை இழந்தது, இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மட்டுமல்ல, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பெரும் பேரிழப்பாகும். அவருடன் பழகிய தோழர்கட்கு அவரது இழப்பும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அனைவருமே அவரது துவளாத நம்பிக்கையையும், நெங்சுறுதியையும் பாராட்டிப் பேசக்கேட்டேன்.

தந்தை வழியில் மகன் நிற்பதைக் கண்டு நற்றே நிம்மதியும் பெற்றேன்.

தோழர் பூபாலசிங்கத்தின் அன்புக்குரியோராய் வாழ்ந்த குடும்பத்தார்க்கும், உடன் பழகிய தோழர்கட்கும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். பூபாலசிங்கம் அவர்களின் நாமம் வாழ்க!

4

# கொள்கைப்பிடிப்புள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர்

**எஸ். விஜயானந்தன்**
*(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, யாழ்.மாவட்ட உதவிச் செயலாளர்)*

ஆர்.ஆர்.பி. எனவும், பூபால் எனவும் தோழர்களாலும் நண்பர்களாலும் அன்பாக அழைக்கப்படும் தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் இயற்கை எய்தியதை நம்பவே முடியவில்லை. இன்றும் கூட எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவராகவே தென்படுகின்றார். இதற்கு முக்கிய காரணம் அன்னாரின் வாழ்க்கை கொள்கைப் பிடிப்புள்ள இலட்சிய வாழ்வாக அமைந்த தாகும்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்பாகவே மார்க்சீச லெனினிசக் கொள்கை களில் நம்பிக்கை வைத்து சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கப்பாடு பட்டார். 1982 ஆம் ஆண்டில் கூட எமது செயல்பாடுகளுக்கு பல முட்டுக் கட்டைகள் எதிர்நோக்குகின்றன. அப்படியிருக்க தோழர் பூபாலசிங்கம் அக்காலகட்டத்தில் எப்படிச் செயற்பட்டார் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

யாழ். பிரதேசத்தில் எமது கட்சியின் கிளையை ஆரம்பித்த முக்கியஸ் தர்களில் ஒருவர். அவரின் வாழ்க்கை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. அத்துடன் உலக சோசலிச இயக்கங் களின் நண்பனாகவே கடைசிவரை வாழ்ந்தவர்.

அயலாரின் எதிர்ப்பு ஒருபுறம், அரசாங்க எதிர்ப்பு மறுபுறமும் இருக்கையில் எல்லாவற்றையும் எதிர்கொண்டு வாழ்க்கையை நடத்திய தோழருக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம் அவர் கண்ட இலட்சிய சமுதாயத்தை அமைக்க எமது பங்களிப்பை செய்வதாகும்.

## 5

# சரித்திரக் கதைச் செம்மல், முத்தமிழ் வித்தகர்

*டாக்டர் விக்கிரமன்*
*அமுதசுரபி ஆசிரியர்*

இலங்கைக்குச் செல்லப் போகிறேன் என்று நான் அறிவித்தபோது யாழ்ப் பாணத்திற்குச் செல்ல மறந்துவிடாதீர்கள் என்று நண்பர்கள் கூறினார்கள்.

ஆம், யாழ்ப்பாணம் செல்லப் போகிறேன். அதுவும் முதலில் யாழ்ப் பாணம் சென்ற பிறகே இலங்கையின் மற்றப் பகுதிகளை சுற்றிப் பார்க்கப் போகின்றேன் என்று சொன்னேன்.

யாழ்ப்பாணத்திற்குச் சென்றால் நீங்கள் பூபாலசிங்கம் அவர்களைச் சந்திக்காமல் திரும்பக் கூடாது என்றும் கூறினார்கள்.

பூபாலசிங்கம் - வரலாற்றில் வரும் கதாநாயகர்கள் பெயர்போல் இருக்கிறதே என்று யோசித்தேன்.

பூபாலசிங்கம் அவர்களைப் பற்றிய பெருமையான செய்திகளை என் நண்பர் கூறினார். அவர் ஒரு புத்தக வியாபாரி. தமிழகத்தில் வெளியிடப்படும் நல்ல நூல்களை பூபாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்து வருவதாக அறிந்தேன். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு நல்ல தொரு விற்பனையைத் தேடித்தரும் பத்திரிகை விற்பனையாளராகவும் அவர் திகழ்கிறார் என்பதையும் கேட்டறிந்தேன்.

1945 ஆம் ஆண்டிலிருந்து நூல் விற்பனை, பத்திரிகை விற்பனைப் பணியில் படிப்படியாக முன்னேறிய பூபாலசிங்கம் உழைப்பால் உயர்ந் தவர்.

யாழ்ப்பாணம் சென்றால் பூபாலசிங்கம் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற கட்டாயமும் எனக்கிருந்தது. சில மாதங்களாக ‘அமுதசுரபிக்கு’ யாழ்ப்பாணத்தில் விற்பனையாளர்கள் இல்லை. தமிழின் இதயமாகத் திகழும் யாழ்ப்பாணத்தில் அமுதசுரபிக்குத் தக்க விற்பனையாளரைத் தேடுவது எனது முக்கிய பணி. என் பயணத் திட்டத்தில் சந்திக்க வேண்டியவர்கள் பட்டியலில் அவரது பெயரை முதலிலேயே சேர்த்துக் கொண்டேன்.

இலங்கைப் பயணம் புறப்படுவதற்கு முதல் நாள் செய்தி ஒன்று கிடைத்தது. எதிர்பாராத செய்தி. திடுக்கிடும் செய்தி. மனவேதனைப்படும் செய்தி.

திரு பூபாலசிங்கம் திடீரெனக் காலமாகிவிட்டார். செய்தியை முதலில் நம்பமுடியவில்லை. பிறகு தக்கவர்களைக் கேட்டறிந்த போது செய்தி உண்மையானது என அறிந்தேன். திரு. ப. பாலசிங்கம் அமரராகிவிட்டார்.

நண்பர்களை ஏராளமாகப் பெற்றிருந்த பூபாலசிங்கம், அவர்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார். அவர் சார்ந்த கட்சிப் பணிகளில் உடன் உழைத்தவர்களைத் தவிப்படையச் செய்துவிட்டுச் சென்று விட்டார்.

யாழ்ப்பாணம் வந்தடைந்த அன்றே பூபாலசிங்கம் அவர்களுடைய புத்தக விற்பனைக் கடைக்குச் சென்றேன். பஸ் நிலையத்திலிருந்து மிகப் பார்வையான இடத்தில் அவரது விற்பனை நிலையம் அமைந்திருந்தது. கலவரச் சமயம் அவரது கடைகளும் தாக்குதலுக்கு உட்பட்டு எரியூட்டலுக்கு இலக்காகின. மனம் தளரா பூபாலசிங்கம் மீண்டும் அங்கேயே நிமிர்ந்து நின்று பணியாற்றத் தொடங்கினார்.

விற்பனை நிலையத்தில் அவரது குமாரர்களைச் சந்தித்தேன். தந்தை விட்டுச் சென்ற பணிகள் அனைத்தையும் தொடர்ந்து செய்ய அவர்கள் உறுதி பூண்டிருப்பது அவர்களது தோற்றத்தில், சுறுசுறுப்பில், செய்கையில், பேச்சில் தெரிந்தது.

பலவித நூல்களும் கிடைக்கும் அந்த விற்பனை நிலையத்தில் யாழ்ப் பாண மக்களுக்குத் தமிழகப் பத்திரிகைகளை அளிக்கும் பூபாலசிங்கம் நிலையத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்த போது அமரர் பூபாலசிங்கம் வளர்த்துச் சென்றிருந்த பெரும் பணி புலப்பட்டது.

அமரராகி விட்ட பூபாலசிங்கம் இன்றும் நம்மிடையே வாழ்கிறார் என்ற உணர்வை அங்குள்ள நூல்களும் பத்திரிகைகளும் நமக்கு தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

வாழ்க அமரர் பூபாலசிங்கம் புகழ்.

6

# தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம்

*சிவா சுப்பிரமணியம்*

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தவர்களுள் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கமும் ஒருவர். மு. கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், சு.வே. சீனிவாசகம், நீர்வேலி கந்தையா ஆகிய தோழர்களுடன் தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாலேயே யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வலுவான ஒரு அடித்தளத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் இவர்கள் போட்ட அடித்தளம் தான் பிற்காலத்தில் அ. வைத்திலிங்கம், பொன். கந்தையா, ஐ.ஆர். அரியரத்தினம் போன்ற தோழர்கள் இவர்களுடன் சேர்ந்து கட்சியை வளர்ப்பதற்கு வசதியாக அமைந்தது என்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது.

தோழர் பூபாலசிங்கமும் மற்றைய தோழர்களும் யாழ்ப்பாணத்தில் கட்சிக் கிளையை ஆரம்பிப்பதற்காகச் செயற்பட்ட காலம் நாட்டில் மார்க்சிசக் கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்குப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்ட காலப்பகுதியாகும். அப்போது போஸ்டர்களை ஒட்டுதல், கட்சிப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தடங்கல்கள் இருந்தன. போஸ்டர்கள் பெரும்பாலும் இரவிலேயே ஒட்டப்படுவதுண்டு. ஒருநாள் இரவு தோழர்கள் கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், இராமசாமி ஐயர் ஆகியோர் போஸ்டர் ஒட்டிக்கொண்டிருக்கும்போது பொலிசார் தங்கள் வாகனத்தில் அவர்களை ஏற்றிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அடுத்தநாள் காலை வீடுகளுக்குப் போகும்படி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியபோதிலும் அவர்கள் அங்கிருந்து செல்ல மறுத்துவிட்டனர். ‘‘நாங்கள் ஏதாவது குற்றம் புரிந்திருந்தால் வழக்குப் பதிவு செய்யுங்கள். இல்லாவிட்டால் எங்களை ஏற்றிய இடத்தில் கொண்டுபோய் விடுங்கள்’’ எனக் கூறி நால்வரும் பொலிஸ் நிலையத்தில் சத்தியாக்கிரகம் செய்தனர். அன்று பகல் அங்கு வந்த ஏ.எஸ்.பி., அவர்களை ஏற்றிய இடத்தில் கொண்டுபோய் விடுமாறு உத்தரவிட்டாராம். எவ்வளவு சிரமத்துக்கு மத்தியில் அக்காலத்தில் இவர்கள் கட்சிப்பணி புரிந்தார்கள் என்பதைக் கூறுவதற்காகவே இச் சம்பவத்தைக் குறிப்பிட்டேன்.

தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் 1922 ஜூன் மாதம் 03 ஆம் திகதி நயினாதீவில் பிறந்தார். வறுமை காரணமாகப் பள்ளிப்படிப்பை அவரால் தொடர முடியவில்லை. தனது ஒன்பதாவது வயதில் யாழ்ப்பாணம் தம்பித் துரை புத்தகசாலையில் ஒரு ஊழியனாகச் சேர்ந்தார். அப்போது அவரது ஒரு நாள் சம்பளம் 21 சதம். பத்திரிகைகளைச் சுமந்து சென்று பஸ்நிலையம், புகையிரதநிலையம், போன்ற சனக்கூட்டம் நிறைந்த இடங்களில் விற்பனை செய்வது இவரது வேலை. பத்திரிகைகளை விற்பனை செய்வதுடன் மாத்திரம் இவர் நிற்கவில்லை. அவகாசம் கிடைக்கும்போதெல்லாம் தான் விற்பனை செய்யும் பத்திரிகைகளை வாசிப்பார். அதன் மூலம் அந்த இளம் வயதிலேயே நாட்டு நடப்புகளை நன்கு தெரிந்துவைத்திருந்தார்.

இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி 1935 டிசம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கெனவே புரட்சி கர சிந்தனைகளைக் கொண்டிருந்த பதின்ம வயது இளைஞன் பூபாலசிங்கம் லங்கா சமசமாஜக் கட்சியைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் பத்திரிகைகளில் படித்தறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இக்காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் வடபுல முக்கியஸ்தர் அட்வகேட் சிற்றம்பலத்தின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சியின் பத்திரிகையான சமதர்மம் பத்திரிகைகளையும் அட்வகேற் சிற்றம்பலத்திடமிருந்து பெற்று விற்கத் தொடங்கினார். அப்பத்திரிகை விற்பனையைத் தொழிலாகக் கருதாமல் பணியாகச் செய்தார். முதலாளிக்குத் தெரியக்கூடாது என்பதால் மறைத்து வைத்தே அப்பத்திரிகையை விற்பனை செய்வார்.

சமதர்மம் பத்திரிகையை அரசாங்கம் தடைசெய்த பின்னரும் பூபால சிங்கம் அதை விற்பதை நிறுத்தவில்லை. இக்காலத்தில் அவர் சமசமாஜக் கட்சியின் வாலிபர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தார். ஒருநாள் யாழ்ப் பாணம் புகையிரத நிலையத்தில் பூபாலசிங்கம் சமதர்மம் பத்திரிகை விற்றுக் கொண்டிருப்பதைக் கண்ட ஏ.எஸ்.பி. சிட்னி டீ சொய்சா அப்பத்திரி கை களைப் பறிமுதல் செய்ததோடு இவருக்குச் சவுக்கால் அடித்தார். அந்தச் சம்பவம் இவரது இடதுசாரிக் கருத்தார்வத்தை மேலும் வலுப்படுத்தியது.

இடதுசாரி இயக்கத்தின் முதலாவது பிளவு 1939 ஆம் ஆண்டு இடம் பெற்றது. மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்து லங்கா சமசமாஜக் கட்சி தன்னை அந்நியப்படுத்த வேண்டும் என்ற பிரேரணை கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் 1939 டிசம்பர் மாதத்தில் நிறைவேறியது. மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்து வெளியேறி ட்ரொஸ்கிய சிந்தனைக்கு உட்பட்ட நான்காவது அகிலத்தில் இணையும் நோக்கத்தைக் கொண்ட இப்பிரேரணைக்கு ஆதரவாக 29 பேரும் எதிராக 5 பேரும் வாக்களித்தனர்.

எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, எம்.ஜி. மெண்டிஸ், கே. இராமநாதன், டபிள்யூ. ஆரியரட்ன, ஏ. குணசேகர ஆகியோரே எதிர்த்து வாக்களித்த ஐவரும்.

லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே பிலிப் குணவர்த்தன, என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, எட்மன்ட் சமரக்கொடி போன்ற தலைவர்கள் ட்ரொஸ்கிய சிந்தனைக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். இவர்கள் 1933 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிலிப் குணவர்த்தனாவை முன்னிலைப்படுத்தி, 'ஜீ குறூப்' என்ற பெயரில் செயற்பட்டு வந்தனர். லங்கா சமசமாஜக்கட்சி ஆரம்பிக்கப் பட்டதும் இவர்கள் தங்கள் குழுவின் பெயரை ட்ரொஸ்கியை முன்னிலைப் படுத்தி 'ரீ குரூப்' என மாற்றி இரகசியமாகச் செயற்பட்டு வந்தனர். கட்சி ஓரளவு பலமடைந்த பின்னர் தங்கள் ட்ரொஸ்கிய நிலைப்பாட்டை வெளிப் படையாக வெளிப்படுத்தினர்.

பிரேரணைக்கு எதிராக வாக்களித்த ஐவரும் கட்சியிலிருந்து வெளி யேறாமல் உள்ளே இருந்துகொண்டு கருத்துப்போராட்டமொன்றை நடத்தி னார்கள். இரு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் பல துண்டுப் பிரசுரங்களை அக்காலப் பகுதியில் வெளியிட்டார்கள். இறுதியாக பிரேரணையை எதிர்த்த ஐந்துபேரையும் கட்சியின் நிறைவேற்றுக்குழு 1949 ஜூன் 15 ஆம் திகதி கட்சியிலிருந்து வெளியேற்றியது. இவர்கள் தங்கள் ஆதரவாளர்களுடன் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் சிறிதுகாலம் செயற்பட்ட பின்னர் 1943 ஜுலை 3 ஆம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தார்கள்.

இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட முதலாவது பிளவு, இளைஞனான தோழர் பூபாலசிங்கத்தை வெகுவாகப் பாதித்தது. புத்தகங்களையும் பிரசுரங் களையும் வாசித்ததன் மூலம் மார்க்சிய சித்தாந்தம் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருந்த தோழர் பூபாலசிங்கம், மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தை ஏற்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயற்படத் தொடங்கினார்.

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையை ஆரம்பிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட காலத்திலிருந்து தனது இறுதிமூச்சு வரை கட்சியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தோழர் பூபாலசி ங்கம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லாத் தேசிய காங்கிரஸ்களிலும் பிரதிநிதியாகப் பங்குபற்றியிருக்கிறார்.

கட்சியின் வளர்ச்சிக்காகவும் ஐக்கியத்துக்காகவும் உட்கட்சி மட்டத்தில் ஆர்.ஆர்.பி. (இப்படித்தான் கட்சித் தோழர்கள் அவரை அழைப்பார்கள்.)

ஆற்றிய பணி வெளியே தெரியாது. கட்சித் தோழர்கள் மாத்திரம் அவற்றை அறிவர். ஒரு உதாரணத்தை இங்கு கூறலாம்.

அறுபதுகளின் நடுப்பகுதியில் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் தோழர் ஐ.ஆர். அரியரத்தினத்துக்கும் தோழர் வி. பொன்னம் பலத்துக்குமிடையே தோன்றிய முரண்பாடு காரணமாகத் தோழர் வி. பொன்னம்பலம் கட்சியிலிருந்து ஓரளவு ஒதுங்கியவராகவே சிலகாலம் வாழ்ந்தார். முள்ளியவளை வித்தியானந்தா வித்தியாலய அதிபராக அப்போது அவர் பணியாற்றினார். தோழர் வி. பொன்னம்பலத்தை மீண்டும் கட்சிப் பணிகளில் ஈடுபடுத்தவேண்டும் என்ற மாவட்டக் குழுவின் தீர்மானத்துக் கமைய, தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கமும் வடமராட்சித் தோழர் செல்லை யாவும் நானும் முள்ளியவளைக்குச் சென்று தோழர் வி. பொன்னம்பலத்தைச் சந்தித்தோம். அன்று இரவு நீண்டநேரம் தோழர் ஆர்.ஆர். பி., தோழர் வி. பியுடன் பல விடயங்களை எடுத்துக்கூறிப் பேசினார். இச்சந்திப்பின் விளைவாக தோழர் வி. பி. விரைவிலேயே அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று முழுநேர கட்சிப் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

கட்சிக்குள் எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒருவராக இருந்ததால் சின்னச்சின்னக் கருத்து வேறுபாடுகளை நீக்கி ஐக்கியத்தை வலுப்படுத்து வதற்கு அவரால் முடிந்தது.

பதினாறாவது வயதில் மார்க்சிய சித்தாந்தத்தால் கவரப்பட்டு, பின்னர் இருபத்தொரு வயதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகிக் கட்சியை வடபுலத்தில் ஸ்தாபிப்பது முதல் வடக்கில் அதன் படிப்படியான வளர்ச்சியிலும், நெருக்கடியான காலகட்டங்களில் கட்சியைப் பாதுகாப் பதிலும் மகத்தான பங்களிப்புச் செய்த தோழர் ஆர்.ஆர். பி., இன்று நம் மத்தியில் இல்லாத போதிலும் கண்முன்னே அவர் நிற்பது போன்ற உணர்வே ஏற்படுகின்றது.

ஆர்.ஆர்.பி. உழைப்பால் உயர்ந்தவர். தொடர்ச்சியான வாசிப்பின் மூலம் பல்துறை அறிவை வளர்த்துக்கொண்டவர். பள்ளிப்படிப்பை இளமை யிலேயே நிறுத்திய போதிலும் தனது சொந்த முயற்சியின்மூலம் இலக்கியம், சமூகம், அரசியல் பற்றிய நிறைந்த அறிவை அவர் பெற்றிருந்தார்.

கட்சிப் பணியுடன் நிற்காமல் சமூக சீர்திருத்த விடயங்களிலும் அவரது பங்களிப்பு இருந்தது. நயினாதீவு பிடாரி கோவில் வேள்வியை நிறுத்துவதில் அவர் வெற்றி கண்டார். நயினாதீவு மணிபல்லவ தேவி பொது நிலைக் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஆர்.ஆர்.பியும் ஒருவர். அக்கழகமே பிற்காலத்தில் அமுதசுரபி அன்னதான சபையாகியது.

(நன்றி: ‘வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள்’, வெளியீடு: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 2011, பக்கம்: 99 - 104)

## 7

# இறை பணிக்கே எம்மை இட்டுச் சென்றவர்

**வி. சபாநாதன்**

*(செயலாளர், நயினாதீவு அபிவிருத்திச் சபை)*

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசரின் திருவாக்கிற்கு இலக்கணம் படைத்துக் காட்டி அந்த இலக்கணத்திற்குத் தமது வாழ்க்கையையே இலக்கியமாக அமைத்துக் கொண்டவர் எமது தலைவர் அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஜே. பி. அவர்கள். சிந்திக்கத் தெரிந்த நாள் தொட்டு அவரது ஆத்மா இறையருளுடன் ஒன்றும் நாள் வரை அன்னாரது எண்ணம், சொல், செயல் யாவும் மக்களுக்காகத் தான் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியதாகவே இருந்தது. எனவேதான் அவரது தலைமையில் பல பொதுப் பணி நிறுவனங்கள் உதயமாகின. பல பொதுப்பணித் தொண்டர்களை அவரால் உருவாக்கிவிட முடிந்தது.

நயினைத் தாயின் புனித மண்ணிலே அவதரித்து, தாம் பிறந்த மண்ணிற்கும், ஈழத் திருநாட்டிற்கும் பெருமை தேடிக்கொடுத்ததோடு மட்டுமன்றி உலக அரங்கிலும் சைவத்தின் தனிச்சிறப்பையும், தமிழரின் மாண்பினையும் எடுத்துக் காட்டிய பெருமை நயினை மாதாவின் தவப் புதல்வர்கள் பலரைச் சார்ந்ததாகும். அத்தகைய பெரியார்கள் வரிசையில் அமரர்களான திரு. க. இராமச்சந்திரா அவர்கள், பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ.ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுக்கு அடுத்த படியாக எமது தலைவர் திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களே வைத்தெண்ணப்பட வேண்டியவர்களாவார்கள்.

அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் இளமைப் பருவம் தொட்டுப் பொதுப்பணிகளில் மிகவும் நாட்டம் கொண்டவராக விளங்கினார். பள்ளிப் பராயத்தில் தாம் கற்ற இராமாயணக்கதையும் அதன் பின்னர் மகாத்மா காந்தி அடிகளின் அகிம்சைக் கொள்கைகளும் தம்மை வெகுவாகக் கவர்ந்தன என்றும், அவைகளே தமக்குப் பொதுப்பணி செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டின என்றும் அவர் அடிக்கடி கூறுவார். அமரர் இளைஞராய் நயினையில் வாழ்ந்த காலத்தில் பல சனசமூக நிலையங்கள் அவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டன. இன்று பல துறைகளிலும் மக்களுக்குப் பணியாற்றி வரும் ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் அமரர் அவர்களின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அக்காலத்தில் தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்துச் சேவையை நடாத்தி வந்த தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தில் முகாமை யாளராகப் பணியாற்றி தீவக மக்களின் பிரயாண வசதிகளுக்காகப் பெரும் பணியாற்றினார். இவரது சேவைக்காலத்தில் சங்கத்துக்குப் பல புதிய மோட்டார் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டன. சங்கத்தின் வளர்ச்சி க்குப் பெரிதும் பாடுபட்டதோடு, பிரயாணிகளின் நலன் கருதி 'நயினாதீவு பிரயாணிகள் சங்கம்' என்ற இயக்கத்தை நிறுவி அதன் மூலம் அரசாங்க அதிகாரிகளுடனும், அரச நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு நயினை மக்களுக்கு பெரும் பணியாற்றினார். நயினாதீவில் 'பஸ்' சேவை ஆற்றப்பட வேண்டும் என விரும்பி அதில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

அமரர் திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஒரு பொதுவுடைமைவாதி. எல்லோரும் இன்புற்றிருப்பதையே அவர் எப்பொழுதும் விரும்பினார். இளமை தொட்டு அவர் 'கம்யூனிஸ்ட்' கொள்கையைப் பின்பற்றி வந்தார். அதே நேரத்தில் அவர் உள்ளத்தில் ஆழ்ந்த இறை நம்பிக்கையும் குடி கொண்டிருந்தது. அவர் இளைஞராக இருந்த காலத்தில் ஆலயங்களில் பலியிடும் கொடிய வழக்கம் இருந்தது. நயினையில் இவர் வழிபடும் ஓர் சக்தியின் ஆலயத்தில் ஆட்டுக்கடா பலியிடுவதை நிறுத்தும்படி உண்ணா விரதமும், சத்தியாக்கிரகமும் நடாத்தி வெற்றி கண்ட நிகழ்ச்சி இவரது காந்தீயக் கொள்கைக்கும் இறைநம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாகும்.

அன்னை நாகபூசணியின்பால் ஆராத பக்தி கொண்டிருந்த அமரர் அவர்கள், அம்பிகையின் அருளைப் பெற வரும் அடியார்களின் பிரயாணக் கஷ்டங்கள், மற்றும் வசதியீனங்கள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். அம்பிகையின் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டும் என்பதற்காக நயினையின் 'தலவரலாற்றையும்' 'தோத்திரப் பாடல்களையும்' அச்சிட்டுக் குறைந்த விலையில் விற்பனை செய்தார். அத்தோடு அம்பிகையின் திருவுருவப் படங்களையும், குறைந்த விலையில் விற்பனை செய்ததன் மூலம் ஈழத்தின் சைவ இல்லங்கள் தோறும் நாகபூசணி அம்பாளின் திருவருள் பாலிக்கச் செய்தார்.

1960 ஆம் ஆண்டில் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாக்களில் மிக முக்கியமானவர் அமரர் திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள். அடியவர்க்கு அமுது செய்வித்தலாகிய அரும்பணி சிறப்புற நடக்க வேண்டுமெனத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அர்ப்பணித்த உத்தமர் அவர். எம்போன்ற இளைஞர்களையும் அர்ப்பணிப்பில் ஈடுபடுத்திய பெருமையும் அவருக்கே உரியது. அடியவர் பசிப்பிணி அகற்றி அதில் வெற்றிகண்ட அமரர் அவர்கள் அடியவர்களுக்கு தாகசாந்திப் பணி செய்ய வேண்டுமென ஆசை கொண்டார்.

முன்னர் அவர் தலைமையில் இயங்கி வந்த நயினாதீவு பிரயாணிகள் சங்கத்தை 1973 ஆம் ஆண்டில் 'நயினாதீவு அபிவிருத்திச்சபை' என மாற்றி அதற்கென புதிய காரிய நிர்வாகக்குழுவை அமைத்து அதன் தலமைப் பொறுப்பை தாமே ஏற்றுக்கொண்டு பெரும் பணி ஆற்றினார். நயினாதீவு அபிவிருத்திச்சபை அம்பிகையின் உற்சவ காலத்தில் வருகை தரும் அடியவர் களுக்கு தாகசாந்தி செய்தற் பொருட்டு ஆலய முன்றலில் மண்டபம் அமைத்து பகல் இரவாக கோப்பி, தேநீர், குளிர்பானங்கள், குடிநீர் முதலானவற்றை இலவசமாக 1973 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் மிகவும் சிறப்பான முறையில் வழங்கி வருகிறது. இவ் அருட்பணியை ஆரம்பித்து வைத்து செவ்வனே நடத்த ஊக்கமும் ஆக்கமும் தந்த பெருமை அமரர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களையே சாரும். அவர்விட்டுச் சென்ற சேவைகளை தொடர்ந்தும் ஆற்றி அவர் கண்ட இலட்சியக் கனவுகளை நனவாக்கும் வல்லமையை அவர் வழி நடத்திய தொண்டர்களாகிய எமக்கு அன்னை 'நாகபூசணி' அருள வேண்டும்.

இத்தகைய சமூகப் பணிகளையும், தெய்வீகப் பணிகளையும் ஆற்றிய அமரர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் ஒரு கொடை வள்ளல். கல்விகற்கும் சிறார்களுக்காக அவர் அள்ளி வழங்கிய நூல்கள் அதிகம். பாடசாலை களுக்கும், நூல்நிலையங்களுக்கும், பொதுநிறுவனங்களுக்கும் தமது ஸ்தாப னத்தில் இருந்து பெறுமதி மிக்க நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

பரிசளிப்பு விழாக்களில் கலந்து கொண்டு சிறார்களை ஊக்குவித்து நூல்களைப் பரிசாக அளிப்பது அவரது கல்விப்பணிக்கோர் எடுத்துக் காட்டாகும்.

***'தக்கார் தகவிலார் என்பவர் தம்***
***எச்சத்தாற் காணப்படும்'*** என்றார் வள்ளுவர்.

அமரர் திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களது தகைமை அவர்விட்டுச் சென்ற பொதுப்பணிகளின் வளர்ச்சியினாலும் அன்னாரது அன்புக் குழந்தை களின் சீரிய வாழ்க்கை உயர்ச்சிகளினாலும் சிறப்புற வேண்டுமென அன்னை 'நாகபூசணியை' இறைஞ்சி நிற்போம் ஆக.

அன்னாராது பேரிழப்பால் ஆற்றொண்ணாத் துயரில் மூழ்கி நிற்கும் அவரது அன்புத் துணைவியார் திருமதி பாக்கியம் அம்மையாருக்கும், அன்புத் தாயாருக்கும், அவர் தம் மக்கள் - மருகர், அன்புச் சகோதரர் - சகோதரிக்கும், அவரது குடும்பத்தவருக்கும் நயினாதீவு அபிவிருத்திச் சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரர் திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஜே. பி அவர்களின் திவ்விய திருவடிகளில் எமது கண்ணீர் அஞ்சலியையும் சமர்ப்பிக்கின்றோம்.

(நன்றி: 'உயர்திரு ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஜே. பீ. நினைவுமலர்', 1982)

8

# அறிவுப் பசிக்கு உதவிய ஆர்.ஆர். பூபாலசிங்கம்

## வி.ரி. இளங்கோவன்

தற்போதைய யாழ்.நவீன சந்தைக் கட்டிடம் அப்போது கட்டப்படவில்லை. அந்த இடத்தில் தான் அன்றைய பஸ் நிலையம் அமைந்திருந்தது. அதற்கு மேற்குப் புறமாகக் கஸ்தூரியார் வீதியின் ஆரம்பம். அதனருகாமையில் மேற்குப் புறமாகத் தகரக் கூரைகளுடன் வரிசையாகப் பல கடைகள். அதிகமானவை குளிர்பானம், பிஸ்கட் முதலியன விற்கப்படும் கடைகள். அவற்றின் நடுவே ஒரு புத்தகசாலை.

அந்தப் புத்தகசாலையின் உள்ளேயும், வாசலிலும் தினசரி பல இலக்கிய வாதிகள், ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்களைக் காணலாம். உள்ளே ஒரு உயர்ந்த கறுப்பு உருவம், வெள்ளை வேட்டி, அதற்கேற்ற வெள்ளை நாசனல் - சேட், சிவப்பு நிற 'மவ்ளர்' தோளில் - சிலவேளை நாரியில் இறுக்கக் கட்டியபடி, சிலவேளை நெற்றியில் சந்தனப் பொட்டு, பளிச்சிடும் வெண்ணிறப் பற்கள் தெரிய சிரிக்கும் அழகு, அன்பாகப் பண்பாகப் பேச்சு. ஆமாம்... அவர் தான் அந்தப் புத்தகசாலையின் உரிமையாளர் ஆர்.ஆர். பூபாலசிங்கம்.

அறுபதுகளின் முற்பகுதி. எனக்கு பன்னிரண்டு - பதின்மூன்று வயதிருக்கும். வார விடுமுறை தினங்களில் அல்லது பாடசாலை விடுமுறை நாட்களில் எனது மூத்த சகோதரர் நாவேந்தனின் அழைப்பின் பேரில் புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து அந்தப் புத்தகசாலையில் அவரைச் சந்திப்பதற்காகக் காத்துநிற்பேன். நாவேந்தன் அண்ணர் அங்கு வந்ததும் ''எப்படி.. நாவேந்தன்..'' என முதலில் புத்தகசாலை உரிமையாளர் நலம் விசாரிப்பார். இருவரும் சில விடயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வர். பின்பு அங்கு நிற்கும் சக எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருடன் அண்ணர் உரையாடிக்கொள்வார். சில பத்திரிகைகள் - நூல்களை எடுத்துப் பார்ப்பார் - வாங்கிக் கொள்வார். அவ்வேளை யானும் சில நூல்களை - பத்திரிகைகளை அங்கு புரட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்படியாகப் பத்திரிகை - புத்தகங்களைப் புத்தகசாலையின் உள்ளே நின்று எடுத்துப் பார்ப்பதும், தேவையானவற்றை வாங்கிக்கொள்வதுமான

பழக்கம் பூபாலசிங்கம் புத்தகசாலையில், யான் நாட்டை விட்டுப் புறப்படும் வரை தொடர்ந்தது எனலாம்.

அந்தக் காலத்தில் இரசிகமணி கனக செந்திநாதன், சு. இராஜநாயகம், கே.டானியல், டொமினிக் ஜீவா, அகஸ்தியர், அம்பி, தேவன் யாழ்ப்பாணம், நந்தி, தில்லைச்சிவன், சொக்கன், முருகையன், சோமகாந்தன், காரை சுந்தரம்பிள்ளை ஆகியோரையும் பின்னர் அறுபதுகளின் பிற்பகுதியில் செ. யோகநாதன், தெணியான், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோருட்படப் பல பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் அந்தப் புத்தகசாலையில் நான் பல தடவைகள் பார்த்திருக்கின்றேன் - பேசியிருக்கின்றேன்.

கஸ்தூரியார் வீதியின் ஆரம்பத்தில் - ஆஸ்பத்திரி வீதியில் இருந்த, எமது ஊரைச் சேர்ந்தவரின் உணவகமான ‘பிருந்தாவனம் ஹோட்டல்’ பிரசித்தி பெற்றது. அதன் உரிமையாளர் பொன்னையா தமிழரசுக் கட்சியின் தீவிர விசுவாசி. எனது சகோதரரின் நண்பர். ஆரம்ப காலத்தில் தீவகத்தில், குறிப்பாகப் புங்குடுதீவில் தமிழரசுக் கட்சியை அறிமுகப்படுத்திய நாவேந்தன் அண்ணருக்கு உறுதுணையாக நின்ற மனிதர். 1961- ஆம் ஆண்டு சத்தியாக் கிரகம் நடந்தவேளை சத்தியாக்கிரகிகளுக்கு உணவளித்த பிரமுகர்.

அந்த உணவகத்தில் குடும்பமாக அமர்ந்து உணவருந்தத் தனியாகச் சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த ஒதுக்கிடங்களில் எனது சகோதரர் நாவேந்தன், அடுத்த சகோதரர் துரைசிங்கம் ஆகியோர் அமர்ந்து பூபால சிங்கம் புத்தகசாலையில் வாங்கி வந்த பத்திரிகைகளை, புத்தகங்களை வாசித்தவாறு தேனீர் அருந்துவர். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், செய்திகள் எழுதிக் கொண்டிருப்பர். யானும் அதில் கலந்து கொள்வேன். பின்னர் மீண்டும் அருகிலுள்ள புத்தகசாலைக்குத் திரும்பி தாம் சந்திக்க வேண்டி யவர்கள் - எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் அங்கு வந்தார்களா எனக் கண்டு பேசி மகிழ்வர்.

அவ்வாறு கலை, இலக்கிய, அரசியல் துறை சார்ந்த சகலரும் சந்திக்கும் - பேசிக்கொள்ளும், சிலவேளை புரிந்துணர்வோடு விவாதித்துக் கொள்ளும் - சர்ச்சைப்படும் இடமாகப் பூபாலசிங்கம் புத்தகசாலை விளங்கியதை யான் அன்று பாடசாலை மாணவப் பருவத்திலேயே பார்த்திருக்கின்றேன். மிக இளம் வயதிலேயே கலை, இலக்கிய, அரசியல் பிரமுகர்கள் பலரையும் பார்த்துப் பேசும் சந்தர்ப்பங்கள் எனக்குச் சகோதரர் நாவேந்தன் மூலம் பூபாலசிங்கம் புத்தகசாலையிலேயே அதிகமாகக் கிடைத்தது எனலாம்.

அந்தக் காலத்தில் பல்வேறு அரசியல் முரண்பாடு கொண்டவர்களும் அந்தப் புத்தகசாலையில் சந்தித்துக் கொள்வர், விவாதித்துக் கொள்வர்.

அவ்வேளை எனது சகோதரர் தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாக, - அவர்களின் இலக்கியப் பிரதிநிதியாக விளங்கியவர். அக்கட்சியின் நட்சத்திரப் பேச்சாளராகவும், எழுத்தாளர்களாகவும் நாவேந்தன், புதுமை லோலன் ஆகியோர் விளங்கினர் என விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

ஆர்.ஆர். பூபாலசிங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர். இருப்பினும் மற்றக் கட்சியின் பிரமுகர்கள், இலக்கியவாதிகள் எவராயினும் அவரது புத்தகசாலைக்கு வரத் தவறியதில்லை. காரணம் பூபாலசிங்கம் அவர்களின் அன்பும் பண்பும் நிறைந்த பேச்சு - உபசரிப்பு. அத்துடன் அன்று மாக்சிச நூல்களை இந்தியாவில் இருந்தும், கொழும்பிலிருந்தும் உடனுக்குடன் பெற்று வாசிக்க பூபாலசிங்கம் புத்தகசாலையே உதவியாக விளங்கியது.

மாக்சிச கருத்துக்களைப் பரப்பும் பத்திரிகைகளை விநியோகித்ததன் காரணமாகப் பொலிசாரின் தாக்குதல்களுக்கும் பூபாலசிங்கம் அவர்கள் ஆளாகியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிரதேச சுயாட்சியே ஏற்றது எனக் கமியூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை வலியுறுத்தவும் அவர் தவறிய தில்லை.

'கமியூனிஸ்ட்' கட்சி பிளவுபட்ட காலத்தில் அவர் கமியூனிஸ்ட் 'கட்சி (மொஸ்கோ) சார்பாகத் தம்மை இனங்காட்டி நின்றார். அதன் தலைவர் களுடன் அவருக்கு நெருங்கிய தோழமை உறவு இருந்தது. இருப்பினும் அன்று பலம் பெற்றிருந்த சீனச் சார்புக் கம்யூனிஸ்ட்' கட்சியினருடன் அவர் நேரடியாக எவ்வேளையிலும் முரண்பட்டதில்லை. எல்லோருடனும் அவர் தோழமையைப் பேணத் தவறவில்லை.

யாழ் புதிய பஸ் நிலையம் முன்பாக மூலைக் கடையில் பூபாலசிங்கம் புத்தகசாலை இயங்கியதுடன் அதன் கிளைகளும் நகரின் சில பகுதிகளில் இயங்கின. 1981 ஜூன் முதல் நாளில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு கேடு செய்யத் திட்டமிட்டவர்கள் கல்விக் களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ். பொதுசன நூல் நிலையத்தைத் தீயினால் பொசுக்கியபோது பூபாலசிங்கம் புத்தகசாலையையும் விட்டு வைக்காமைக்குக் காரணம் அவற்றின் முக்கியத் துவமே. எத்தகைய இழப்புக்கள் ஏற்படினும் துயர்கள் எதிர்வந்த போதும் துவண்டு விடாமல் விடாமுயற்சியுடன் புத்தகசாலையைத் தளிர்க்கவைத்தார்.

நூல் நிலைய எரிப்பை உண்மை நிலைமைகளை தமது கட்சித் தலைவர்கள் மூலம் தென்னிலங்கையில் சிங்கள, ஆங்கில ஏடுகளில் வெளிவர ஆவன செய்தார். யாழ்.பொதுசன நூலகத்தின் மீள்விப்புக்கு உதவும் பணிகளையும் மேற்கொண்டார் என அன்றைய மாநகர முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்புத் தலைவர்கள், தமிழக கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள், இலக்கியவாதிகள் யாரேனும் யாழ்ப்பாணம் வந்தால் அவர்களுக்கு பூபாலசிங்கம் அவர்களின் வீட்டில் நிச்சயமாக உபசரிப்பு நிகழும். அவரது சொந்த ஊரான நயினாதீவைச் சேர்ந்தவர்களுக்கும் அவர் முன்மாதிரியானவராக, பெருமைக்குரியவராக, உதவுகின்ற பரோபகாரியாகத் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகப் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், கலை, இலக்கிய, அரசியல்வாதிகள் அத்தனை பேரினதும் அறிவுப் பசிக்குப் பூபாலசிங்கம் புத்தகசாலை ஒரு சத்திரமாகவே விளங்கியது எனலாம்.

எழுபதுகளின் பிற்பகுதியில் அப்புத்தகசாலையில் பத்திரிகை விற்பனைப் பகுதிக்கு யாழூர் துரை என்னும் எழுத்தாளர் பொறுப்பாக இருந்தார். வார, மாத சஞ்சிகைப் பகுதிகளைத் தர்மராசா என்ற இளைஞர் பார்த்துக் கொள்வார். நண்பகல் வேளைகளில் தினசரி யான் அங்கு சென்று, அவர்களுக்குப் பக்கத்தில் நின்று அன்று வந்த சகல பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் மேலோட்டமாகப் பார்த்துவிட்டுத் தேவையானதை வாங்கிக் கொள்வது வழக்கம். அவ் வேளையில் மூத்த எழுத்தாளர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உட்படப் பல எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் அங்கு வந்து என்னைப் போன்றே அவர்களும் பத்திரிகை, சஞ்சிகைகளை மேலோட்ட மாகப் பார்ப்பார்கள். தேவையானவற்றை வாங்கிக்கொள்வர்.

பத்திரிகைப் பகுதிப் பொறுப்பாளர் யாழூர் துரைக்கு உதவியாக அவரது மருமகன் ரவி என்ற உயர்தர வகுப்பு மாணவரும் அங்கு சிலவேளை நிற்பார். அவரும் சஞ்சிகைப் பகுதிப் பொறுப்பாளரும் எம்மைப் போன்று தினசரி வந்து பத்திரிகை, சஞ்சிகை வாசிப்போருக்கு 'ஒரு குறிப்புச் சொல்' வைத்துத் தமக்குள் பேசிக் கொள்வர். அது என்னவெனில் (15/3) 'பதினைந்தின் கீழ் மூன்று' சங்கக்காரர் என்பதாகும் O வையும் 3 - C யையும் குறிக்கும். அதாவது ஓசியில் (OC) எல்லாம் படிப்பவர்கள் என்பதாகும். இது எமக்கும் தெரிந்திருந்தது.

ஒரு நாள் இவ்வாறு அவர்கள் தமக்குள் பேசிக்கொள்ளும்போது யான் ''தம்பியவை நீங்கள் சின்னப் பிள்ளைகள். நாங்கள் எத்தனையோ வருசமா இப்படித்தான் வந்து பார்க்கிறனாங்கள் உங்களுக்குத் தெரியாவிட்டால் உள்ளே முதலாளி இருக்கிறார் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கோ'' என்று சிரித்துக் கொண்டே கூறினேன். அருகில் டொமினிக் ஜீவா புன்முறுவலோடு ஏதோவொரு சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அன்று மாலை தோழர் பூபாலசிங்கம், அவர்களிடம் 'தம்பியவை அவர்கள் இலக்கியவாதிகள். எங்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

நம்பிக்கையானவர்கள், மரியாதைக்குரியவர்கள். அவர்கள் எதை எடுத்து வாசித்தாலும் ஒன்றும் சொல்லாமல் பண்பாக நடந்துகொள்ளுங்கள்'' என்று சொன்னாராம். இந்தப் பண்பு தோழமைதான் தோழர் பூபாலசிங்கம் அவர் களைச் சகல இலக்கியவாதிகள் மனதிலும் பதியவைத்தது.

பாரிஸ் நகரில் அறிவுசார் தமிழ்ப் புத்தகசாலையாக விளங்கும். 'அறிவாலயம் புத்தகசாலை' இதன் உரிமையாளர் நண்பர் சிவதாஸ். சில வேளைகளில் யான் அங்கு பத்திரிகை, சஞ்சிகை எடுத்து மேலோட்டமாகப் பார்க்கும் போது சிவதாஸ் பலர் முன்னிலையிலும் பகிடியாக ''இது என்ன யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை என்ற நினைப்போ?'' என்பார். அப்போது யானும் அவருக்குப் பகிடியாக அதிரடி மறுமொழி சொல்வதுண்டு. அந்தளவிற்கு பூபாலசிங்கம் புத்தகசாலை இலக்கிய வாசகர்களின் விருப் பங்களை நிறைவேற்ற உதவும் கூடமாக விளங்கியதை யாவரும் அறிந் திருந்தனர்.

மரணம் நிச்சயமானது தான் என்றாலும் இலக்கிய நெஞ்சங்களை யெல்லாம் தோழர் பூபாலசிங்கம் அவர்களின் மரணம் துயரில் ஆழ்த் திவிட்டது என்பது உண்மை.

தமிழறிஞர் ஒருவர் குறிப்பிட்டது போல, சிறுகக்கட்டி பெருக வாழ்ந்த பாலசிங்கம் அவர்களுக்கு புத்திர சந்தானமும், புத்தக சந்தானமும் புகழ்பாடும் எச்சங்களாய் உள்ளன என்பது யாவரும் அறிந்ததே.

தந்தையின் பணியை அவரது விடாமுயற்சி, ஊக்கம், பரோபகாரம் யாவற்றையும் மனதில் கொண்டு அவரது மூத்த புதல்வர் ஸ்ரீதர்சிங் இன்று முன்னெடுத்து வருகிறார். தந்தையின் பெயர் சொல்லும் புத்தக நிறுவனங் களை ஆலவிருட்சமாய் தளிர்க்கவைத்து கொழும்பு, யாழ்ப்பாணம், லண்டன் நகரங்களில் ஸ்ரீதர்சிங் சகோதரர்கள் நற்பணிகளுக்கும் உதவிநின்று புகழீட்டி வருகிறார்கள்.

தோழர் பூபாலசிங்கம் நாமம் என்றும் நீடித்து நிலைக்கும்......

(நன்றி: 'மண்மறவா மனிதர்கள்', வி.ரி. இளங்கோவன், ஏப்ரல் 2011)

9

# புத்தக வர்த்தகர் பூபாலசிங்கம்

*சைவப்புலவர் க.சி. குலரத்தினம்*

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்க' எனத் தமிழ்ப் பெரியார்கள் வாழ்த்திய வண்ணத்துக்கமையவும், 'திரைகடலோடித் திரவியம் தேடு' என்று நல்லவர்கள் ஊக்குவித்த வண்ணத்துக்கமையவும் எங்கள் மத்தியில் உதாரண புருடராய் வாழ்ந்த இளைஞன் பூபாலசிங்கம்.

திரைகடல் சூழ்ந்த நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது பன்னிரண்டாண்டுப் பருவத்திலேயே கடல் கடந்து தொழில் முயற்சியில் துணிகரமாகப் புகுந்தவர். நயினை நாகம்மாளின் கருணையும், நல்லூர்க் கந்தனின் திருவருட் கடாட்சமும் பூபாலசிங்கத்துக்கு ஆக்கபூர்வமாக இருந்தன.

பிராரத்துவ வினையை அவர் அனுபவித்த விதமும் ஆகாமியத்தை அவர் ஈட்டிய வகையும், விளக்கமுடியாதவை. மண்ணாங்கட்டியொன்று மேலிடத்திலிருந்து விழுந்தால், தூளாக உடைந்து மண்ணோடு மண்ணாய் நிலத்தை வறுகிப் பிடித்துக்கிடக்கும். ஒரு பந்து மேலிருந்து விழுந்தால் மறுதலித்து உடனடியாக மேலே எழும்பும். மறுமலர்ச்சி அடையும்.

எரியுண்டவர், வெட்டுண்டவர், வீரராயிருந்தால் ''ஐயோ இதைப்பார், அதைப்பார்'' என்று தானும் அழுது பிறரையும் அழப்பண்ணுவதற்கு ஒப்பாரி சொல்ல மாட்டார். பூபாலசிங்கம் தந்தையார் வழியால் தலைசிறந்த சைவசித்தாந்தி. அவர் ஊழின் வலிமையை உணர்ந்து புன்முறுவல் பூத்தவர். வாழ்வும் தாழ்வும், பகலும் இரவும் எனக் கண்டு வாழ்ந்தவர். 'யாவர்க்குமாம்' எனத் தொடங்கும் திருமூலர் திருமந்திரம் வெறும் சைவசித்தாந்தத் திறன் மாத்திரமல்ல. அது தலைசிறந்த சர்வோதயம். சர்வோதயத்தில் புஷ்பித்த பொதுவுடைமை கண்டவர் பூபாலசிங்கம்.

பூபாலசிங்கம் ஒரு முறையல்ல இருமுறையல்ல, ஒரு இடத்திலல்ல, இரு இடங்களிலல்ல, பலமுறை பல இடங்களில் படாதன பட்டுத் தளிர்த்தவர், தலைதூக்கியவர், தலைவர். பூபாலசிங்கம் தன்னைப் பின்னின்று ஊக்கமளித்து வாழவைத்த அன்னை நாகேஸ்வரியின் திருப்பணிகளில் வெகுவாக ஈடுபட்டு, அவள் மகிமை கூறும் பெருநூல் ஒன்றைத் தக்க புலவரைக் கொண்டு உருவாக்கி வெளியிட்டவர்.

அண்மையில் இதுவரை ஆரும் பெறாத ஊக்கம் ஒன்று உண்டாகப் பெற்றுத் திருமுறைத் திரட்டு ஒன்றைத்திரட்டி உருவாக்கி அழகிய படங் களுடன் வெளியிடும் முயற்சியில் ஈழுபட்டு முழு வேலையும் செய்து முடித்து நூல் வெளியிடும் நாள் ஒன்றை நிர்ணயிக்க முயன்ற வேளையில் அவரின் பிரார்த்தநாள் முடிந்தது.

சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்த பூபாலசிங்கம் அவர்களுக்குப் புத்திர சந்தானமும் புத்தக சந்தானமும் புகழ்பாடும் எச்சங்களாய் உள்ளன. எல்லார்க்கும் இனிய பூபால் இறைவனடி நிழலில் இன்பம் துய்ப்பாராக.

(நன்றி: 'உயர்திரு ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஜே.பி. நினைவுமலர்', 1982)



சோவியத்தொன்றியம் சென்று மீண்டு
தாயகம் நயினையில் சாற்றும் பேருரை

10

# வடபகுதி முற்போக்கு அணியினருக்கு ஏற்பட்ட பேரிழப்பு


## இராஜா விசுவநாதன்

(முன்னாள் யாழ்ப்பாண மாநகர முதல்வர்)


மார்க்சிய லெனினிச சித்தாந்த ஆதாரத்தில் தொழிலாளர், விவசாயிகளின் ஆட்சியை புரட்சி வழியில் நிறுவ வேண்டும் என்பதையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இலங்கியவர் தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம்.

தோழர் பூபாலசிங்கம் அவர்களின் திடீர் மரணம் வடபகுதியைச் சேர்ந்த முற்போக்கு அணியினருக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் வடபகுதி மக்களின் அறிவுப் பசிக்கு ஊட்டம் அளிக்க வேண்டுமென்ற பெருவிருப்புக் காரணமாகவே புத்தக விற்பனையைத் தமது தொழிலாக எடுத்துக்கொண்டார். அன்னாரது புத்தக விற்பனை நிலையங்கள் யாழ் நகரின் மையமான மூவேறு இடங்களில் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே.

தமிழ் மக்களின் கல்வி விருத்திக்குக் கேடு சூழவேண்டும் என்று திட்டமிட்டவர்கள் 1981 ஜூன் முதல் நாளில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டின் பெட்டகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தை தீயினால் பொசுக்கிய போது தோழர் பூபாலசிங்கம் அவர்களுடைய நிறுவனங்களையும் விட்டு வைக்காமைக்குக் காரணம் அவற்றின் முக்கியத்துவம் கருதியே.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் மேற்படி அழிவுகளினால் தமக்கு ஏற்பட்ட சொந்த இழப்பின் மத்தியிலும் யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தை மீள்வித்துப் புதுப்பிப்பதில் பெரும் ஆர்வத்தோடு உழைத்து வந்தார். சம்பவித்த நிகழ்வுகளை அடுத்து தோழர் கௌமன் அவர்களது வடபகுதி வருகையைத் தொடர்ந்து அவை குறித்து தென்பகுதி மக்களும் உண்மைகளை உள்ளது உள்ளபடி அறியவரும் வகையில் தாம் சார்ந்த இயக்க ஏடுகளில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் செய்திகள் வரப் பார்த்துக் கொண்டார். தமிழக இயக்கத் தோழர் கலியாணசுந்தரம் அவர்கள் ஊடாக நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் தமிழக அரசும், தமிழக மக்களும் அறியும்படி செய்தார். அங்குள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் மூலம் புத்தகங்களை

அன்பளிப்பாகத் தருவித்து கொழும்பில் இருந்து நூலகத்துக்கு அவற்றை எடுத்து வரும் செலவுடன் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்ள முன்வந்தார். தமது சோவியத் விஜயத்தின் போதும் யாழ். நூலக மீள்விப்புக்கு உதவும் பணிகளை அவர் மறந்துவிடவில்லை.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பொதுப் பிரச்சினையிலும் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தத் தயங்காத துணிவுடையவராக விளங்கிய ஒரு பெரியவராவார்.

தோழர் பூபாலசிங்கம் அவர்களது மறைவால் வாடும் அன்னாரது துணைவியாருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



புத்தகத்துறையும் புத்துணர்வதனை
வித்தகர் அமிருடன் விளக்கும் மாட்சி

11

# இரக்கம் மிகுந்த பொதுநலப் பணியாளர்

வெ. யோகேஸ்வரன்
(யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர்)

புத்தக நிலையமென்றவுடன் பூபாலசிங்கம் அவர்களின் நினைவே எமக்கு உடன் எழுகின்றது. தமிழ் ஈழத்தில் புத்தக வியாபாரத் துறையில் நெடுங்காலக் கீர்த்தியும் அனுபவமும் மிக்க அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னார் அன்பு, பண்பு, ஆற்றல். இரக்கம் மிகுந்த பொது நலப் பணியாளர் என்பதை நாடு நன்கறியும். இளமையிலேயே இடதுசாரித் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு இறுதிவரை அச்சுவட்டிலே இம்மியும் பிசகாது பணிபுரிந்த பண்பாளர் அவர்.

தமிழ் ஈழத்திலே ஆட்சியாளரின் ஆயுதம்தாங்கிய படையினர் நடாத்திய அனர்த்தங்களில் மும்முறை அவரது ஸ்தாபனம் தீக்கிரையானபோதும், துவண்டுவிடாத துணிவு மிக்கவர். ஈழத்துப் படைப்புகளின் வளர்ச்சியில் அதிக அக்கறைகொண்டவர். எமது மக்களின் புத்தக ரசனையை நன்கறிந்த அவரின் மறைவு தமிழ்கூறும் நல்லுலகின் போதாத காலத்தை நமக்கு நினைவுறுத்துகின்றது. அன்னாரின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத் தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# 12

# பூபாலுக்கு புரட்சிகர அஞ்சலி

**கே.பி. சில்வா**
*(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்)*

தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் நம்மை விட்டு மறைந்து விட்டார். அந்த சோகம் எம் மனதை விட்டு இன்னும் அகலவில்லை. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினரைப் போன்றே நாமும் தோழர் பூபால சிங்கத்தின் மறைவால் வேதனைப்படுகிறோம்- விம்மி அழுகின்றோம்.

ஏன் இவ்வாறுற்றோம் என்பதை அறிய அவரின் கடந்த கால வாழ்க் கையை சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது நன்று. நான் குறிப்பிடுவது எமது கட்சியுடனும் எம்முடனும் பொதுவில் இந்நாட்டு இடதுசாரி இயக்கத்துடனும் அவர் கொண்டிருந்த இறுதிவரை விடுபடமுடியாத பிணைப்பையேயாகும்.

தமது 15 வயதிலேயே அரசியலில் ஈடுபாடு கொண்ட அவர் இடது சாரிகளினதும் முக்கியமாக சமசமாஜக் கட்சியினதும் இலக்கியங்களை மக்களிடையே கொண்டு சென்று விநியோகித்தார். அந்த இளம் பிராயத் திலேயே மக்கள் இடதுசாரி இலக்கியங்களைக் கற்றறிந்ததால் தான் உண்மை விளங்கும். அப்பொழுது தான் அவர்கள் எதிர்காலத்தில் இடதுசாரிகளைத் தழும்பலின்றி ஆதரித்து நிற்பர் என்ற சத்தியத்தை உணர்ந்திருந்தார். அத்துடன் உழைக்கும் மக்கள் படும் அல்லல்களைத்துடைத்திடவும், அவர்களை ஸ்தாபனங்களில் ஒன்று திரட்டிப் போராட்டங்களில் ஈடுபடுத்தவும் அப்பொழுதுதான் சாத்தியம் ஏற்படுமென விசுவாசித்து மனங்கொண்டு மாசற்ற பணியாற்றினார்.

அவரின் அரசியல் வளர்ச்சியுடன் காலப்போக்கில் சிறுபான்மை இனங்களின் முக்கியமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு சோஷலிச அமைப்பின் வாயிலாகத்தான் காணமுடியுமென உணர்ந்த தினால், அதன் பொருட்டு இந் நாட்டில் தேசிய ரீதியாக இயங்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்தார். அதன் கிளையை யாழ்.பிரதேசத்தில் நிறுவத் தமது முழு ஆதரவையும் நல்க முன்வந்தார். அச்சமயம் தோழர்கள் எம்.ஸி. சுப்பிரமணியம், எஸ். இராமசாமி ஐயர், எம். காத்திகேசன், எஸ்.கே. கந்தையா, ஆகியோர் வட பிரதேசத்தில் தமிழ் மக்களிடையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையொன்றை நிறுவிட முழு மூச்சாக

உழைத்து வந்தனர். அவர்களுடன் தோழர் பூபாலசிங்கமும் இணைந்து இக்கிளையை நிறுவிய ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரானார்.

தமது இளமைப் பராயத்தில் கட்சியின் நடவடிக்கைகளில் துணிவுடனும், இயக்க உணர்வுடனும் தீவிரமாக ஈடுபட்டார். இதற்கு நல்லதொரு எடுத்து க்காட்டு ஒரு துண்டுப்பிரசுர விநியோகத்தின் மீது அவர் குற்றங்காணப்பட்டு அன்றைய ஆட்சியாளர்களால் சிறைவாசத்திற்கு உட்படுத்தப்பட்டதாகும்.

பின்னர் யாழ்.பிரதேசத்தில் கட்சியின் மாவட்டக்குழு அமைக்கப்பட்டு இயங்குங்காலை, அதில் செயற்குழு அங்கத்தவராகவும், பொருளாளராகவும் கடமையாற்றினார். இக் காலத்தில் இப்பிரதேச தொழிற்சங்க இயக்கத்திலும், கட்சி அணிகளிலும் தாம் இயங்குகையில் கடுமையான தமது உழைப்புடன் பொருளுதவியையும் நல்க அவர் பின் நிற்கவில்லை.

தமிழ் மக்களிடையில் மாக்ஸிச இலக்கியத்தைப் பரப்பும் அரும் பணியில் தாமே இவ்விலக்கியங்களைச் சுமந்து சென்று வடஇலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமெல்லாம் விநியோகித்தார். இவ் விடாமுயற்சியின் பிரதிபலனாக இத்துறையில் ஒரு புத்தகக் கடையையே நிறுவினார். முக்கியமாக அக்கால சூழ்நிலையில் மக்கள் வாங்கவோ-விற்கவோ பின்னடையும் மார்க்ஸிய நூல்களை இவர் துணிந்து தமது கடையில் வைத்து விநியோகித்தார். இதன் பொருட்டு பல எதிர்ப்புக்களைத் தானும் மனந்தளராது சமாளித்துள்ளார்.

யாழ். பிரதேசத்தில் அண்மையில் நடத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தின் பிரதிபலனாக தோழர் பூபாலசிங்கத்தின் புத்தகக்கடை கொடுங்கோலர்களால் தீயிடப்பட்டுக் கொளுத்தப்பட்டது. பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இது கூட தமிழ் மக்களிடையில் மாக்ஸிச இலக்கியத்தை நீண்ட காலமாகப் பரப்பி வருவதைப் பொறுக்காத அதன் எதிர்ச் சக்திகள் கட்டவிழ்த்து விட்ட அநியாயங்களின் தொடர் நிகழ்ச்சியாகவே தென்படுகிறது. எனினும் ஒரு முழு அழிவைச் சந்திக்க நேரிடினும் - தமது ஆவி பொருள் அனைத்தையும் இழக்க நேரிடினும் மாக்சிச இலக்கியங்களை பிரச்சாரப்படுத்தும் பணியை நாம் நிறுத்தப் போவதில்லை என சூளுரைத்து அப்பணியை முன்னெடுத்துச் சென்றார்.

சோஷலிச நாடுகளுடனான நேச உறவை ஏற்படுத்தவும் அதை வளர்த் திடவும் - அதே வேளையில் உலக சமாதானத்தின் இன்றைய அவசியத்தை உணர்ந்தவராகவும் அதன் பொருட்டுத் தமது பிரதேச மக்களை அணி திரட்டவும் முன்னோடியாகப் பணியாற்றினார். சோவியத் யூனியன், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லவாக்கியா, கியூபா ஆகிய நாட்டு மக்களுடன் நட்புறவுச் சங்கங்களை வட பிரதேசத்தில் நிறுவிடவும் அவை

களைப் போஷித்து வளர்க்கவும் முக்கிய பங்கு வகித்துள்ளார். அதேபோன்று சமாதான சபையின் கிளையைத் தாம் வாழும் பிரதேசத்தில் நிறுவுவதிலும் பங்காற்றியுள்ளார். ஆகவே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண விழைந்த அதே போக்கிலேயே சர்வதேசியப் பிரச்சினைகளிலும் தாம் கம்யூனிசவாதி என்ற வகையில் பங்குப் பணியாற்றியுள்ளார்.

அவரது வாழ்க்கைக் காலத்தில் தான் ஒரு சர்வதேசியவாதி என்ற உணர்விலும், தேசிய ரீதியில் பிற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடியதுடன் அவ்வப்போது நமது இயக்கத்தில் முளைவிட்ட சந்தர்ப்பவாதப் போக்குகளையும் நேருக்கு நேர்முகம் கொடுத்து முறியடிக்கவும் அவர் போராடியுள்ளார்.

எனவே இத்தகைய ஒரு தோழரை இழந்துள்ள நாம், யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு மாத்திரமல்ல கம்யூனிஸ்ட் கட்சிக்கும், முழு இடதுசாரி இயக்கத்திற்கும் ஏற்பட்ட ஒரு இழப்பாகவே இதை நாம் கருதுகின்றோம்.

தோழர் பூபாலசிங்கத்தின் மறைவையிட்டு நாம் எமது நெஞ்சாழ்ந்த துக்கத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்திக்கொள்கிறோம். அத்துடன் அவரை இழந்து ஆறாத்துயருற்றுள்ள மனைவி - பிள்ளைகள், உற்றார்-உறவினர்கள், தோழர்கள் - நண்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இறுதியாக தோழர் பூபாலசிங்கம் விசுவாசித்துப் பின்பற்றிய கொள்கையின் துவஜத்தை உயர்த்திப்பிடித்து அவரின் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என சங்கற்பம் ஏற்பதுடன் அன்னாருக்குச் செங்கொடி தாழ்த்தி எமது புரட்சிகர அஞ்சலிகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் எனது சொந்த முறையிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

12.8.1982

13

# எங்கள் தோழர்

எம். சி. சுப்பிரமணியம்
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்)

இவ்வுலகில் தாம் கொண்ட கொள்கைக்காக, இலட்சியத்திற்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்துவரும் மக்கள் எண்ணிக்கை அருகிவருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. சுயநலத்துக்காக உன்னத குறிக்கோள்களையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு அற்பசொற்ப ஆதாயத்துக்காக அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தி மனிதர்களையும் எம்மால் இனங் கண்டு கொள்ளமுடிகிறது. ஆயினும் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக மனித குலத்தின் விடுதலை சகல நிலைகளிலும் நம் நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி, அனைத்துலக மக்களுக்கும் மாக்ஸிய நெறியிலேயே மலரும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் தன்னை 1940 ஆம் ஆண்டுகளில் இருந்து இறக்கும் வரை இடதுசாரி இயக்கத்துடன் இணைத்துக் கொண்டவர் அண்மையில் அமரராகிய எங்கள் தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள்.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் தமது இளமைப் பருவத்திலிருந்தே சமூக சீர்திருத்தம், சமரச நோக்கு என்பவற்றால் கவரப்பட்ட முற்போக்குச் சிந்தனை உடையவராகக் காணப்பட்டதனாலேயே ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியிலும் அதன்பின் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினராகச் சேர்ந்து பல உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றினார். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பும் பின்பும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களிலும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களிலும் எம்மோடு தோளோடு தோள்நின்று தமது பங்களிப்பினைத் தந்த செயல்வீரன் ஆவார்.

தோழர் அவர்கள் பத்திரிகைகளின் விற்பனைத்துறையில் ஈடுபட்டு இலங்கைத்தீவு எங்கும் புகழ் பெறக் காரணமான ஆரம்ப பயிற்சியை சமதர்மம், மாணவர் செய்தி, தேசாபிமானி போன்ற கட்சிப் பத்திரிகைகளை தமிழ் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக் கொண்டார் என்றால் அது மிகையாகாது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்.மாவட்டக் குழுவில் உறுப்பினராகவும் அதன் தனாதிகாரியாகவும் இருந்து சேவையாற்றினார். தொழிற்சங்க

நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு சோசலிச நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் செய்து வந்தார். தோழர் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டதுடன் தான் பிறந்த தனது ஊரான நயினாதீவின் முன்னேற்றத்திலும் கூடிய கவனம் செலுத்தித் தனது பங்களிப்பை வழங்கினார்.

தோழர் அவர்கள் சொந்த வாழ்வில் எல்லோருக்கும் இனியவராகவும் உபகாரியாகவும் வாழ்ந்துள்ளார். சொந்த வாழ்வில் பல கஷ்ட நஸ்டங்களும், பொருளாதார இழப்புகளும் ஏற்பட்ட போதும் மனம் சளைக்காமல், இலட்சி யத்தைக் கைவிடாமல், திட நெஞ்சுரத்துடன் எல்லாவற்றையும் சகித்து வாழ்வில் முன்னேறியவர்.

1937 ஆம் ஆண்டிலிருந்து தோழர் ஆர்.ஆர். பூபாலசிங்கத்துடன் நான் தோழமை பூண்டிருந்தேன். கட்சித் தோழர்கள் யாராவது தவறுகள் செய்ய நேரிடும்போது அவர்களது தவறுகளை விமர்சனம் செய்து சரியான வழியில் தோழர்களை நெறிப்படுத்தியும் உள்ளார்.

தோழரின் மறைவு அவரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஏற்படுத்திய இழப்பைவிட, இந்நாட்டு முற்போக்கு இயக்கங் களுக்கும், பிரதானமாக கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சுற்றத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செய்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைக. வாழ்க தோழர் நாமம்.

## 14

# ஓர் இலட்சியவாதி

**அ. வைத்திலிங்கம்**

*(வட பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்)*

அமரர் ஆர்.ஆர். பாலசிங்கம் சிறு வயதிலிருந்தே தனது வாழ்க்கையை ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணித்தவர்.

தனது சொந்த வாழ்வில் ஏற்பட்ட கஸ்டங்களையும், நஸ்டங்களையும் பொருட்படுத்தாது தனது இலட்சியத்தில் உறுதியாக நின்றவர். மனிதனை மனிதன் சுரண்டுவதும் இனத்தை இனம் அடக்குவதும் ஒழிக்கப்பட்ட ஓர் சமத்துவமான சுதந்திர சோசலிஸத்தை நோக்கி முன்னேறுவோம் - இதுவே அவரது இலட்சியம் ஆகும்.

அவரது கனவு சோவியத் யூனியன் மற்றும் ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய, தென்அமெரிக்கா போன்ற நாடுகளில் இன்று சுடர்விட்டு வளர்ந்து வருகின்றது. இதனை சகிக்க முடியாத ஏகாதிபத்திய நாடுகள் உலக மக்களையும் கலாசாரத்தையும் அழிக்கக் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட அணு ஆயுதப் போரைக் கட்டவிழ்த்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அணுஆயுதப் போரைத் தடுப்பதே முற்போக்கு மக்களின் தலையாய கடமையாகும்.

இதனை உணர்ந்த அமரர் பூபாலசிங்கம் இலங்கை சமாதான சபையின் யாழ்.கிளையின் உறுப்பினராகச் சேர்ந்து சமாதானத்திற்கான தனது பங்களிப்பை நல்கி வந்தார். உலகளாவிய சமாதானசபை அணு ஆயுதப் போரை எதிர்த்து உலக மக்களின் பேரணியைத் திரட்டி வருகின்றது. இச் சபை மூன்றாம் உலக நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் முன்னேற்றத்திற் காகவும் குறிப்பாக பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும் அரசுரி மைக்கும் போராடி வருகின்றது.

முற்போக்கு இயக்கங்கள் போராட்டத்தை ஆரம்பித்தாலும் அதற்கு முன்னுதவியாகவும் உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர் அமரர் பூபாலசிங்கம் அவர்கள்.

அவரது இலட்சியத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தி எல்லா இனமக்களும் சமத்துவ அடிப்படையில் இஸ்டபூர்வமான ஒற்றுமையில் சோஷலிசத்தை நோக்கி முன்னேறும் இலங்கையை அமைப்பதே அன்னாருக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

15

# எண்ணிய கருமந்தனை விரைவில் எழிலுறமுடிக்கும் கர்மவீரர்

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

திரு. இ.இ. பூபாலசிங்கம் அவர்களின் மறைவினாலே புத்தக உலகமும் தமிழினமும் அடைந்த இழப்பு பேரிழப்பாகும். தனிப்பட்ட வாழ்விலும், வர்த்தகத்துறையிலும் அவருக்குரிய தீர்க்கமான போக்கும் அவர் ஆற்றிய பணிகளும் நெஞ்சிற் பசுமையாய் நிறைந்தே கிடக்கின்றன.

பூபாலசிங்கமவர்கள் சிறுவயதிலிருந்து புத்தகத் தொழிலில் இறங்கி வளம் பல கண்ட சீமான். 1945 ஆம் ஆண்டிலே அவர் நிறுவிய பூபால சிங்கம் புத்தகசாலை மூன்று தடவை தீக்கிரையானது. ஐந்து கடைகள் எரிந்து சாம்பலாகின. ஆனால் அவர் மனம் தளரவில்லை. கடையை மூன்று முறை புதுக்கி அமைத்தார். எண்ணிய கருமந்தனை விரைவில் எழிலுற முடிக்கும் வீரன் என்பதனைச் செயலிற் காட்டினார். வர்த்தகத் துறையினருக்கு ஒரு வழிகாட்டியாக, அற்புதப் பணி புரிந்து, அனைவரும் மதிக்கும் செம்மலாகத் திகழ்ந்தார். அவரின் திண்ணிய நெஞ்சும் எதையும் தீர்க்கமாய் செய்யும் வன்மையும் பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. பூபாலசிங்கம் புத்தக சாலை தமிழறிஞர் சந்திக்கும் ஒரு அறிவுக் கூடமாகக் காட்சியளிக்கிறது.

அறப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, பொதுப்பணி எனப் பல்வேறு பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய நல்ல பண்பாளர். வடபகுதியிற் பொதுவுடைமைக் கட்சி ஆரம்பித்த காலத்தில் இருந்து ஆரம்ப உறுப்பினராக உழைத்து வந்தார். தீவுப்பகுதி மோட்டார்வள்ள சபையைத் தொடக்கி வைத்த பெருமையும் அவருக்குண்டு.

ஆலயம் எங்கும் அறப்பணி செய்ய ஆர்வமாய் உழைத்தவர் பூபால சிங்கம் அவர்கள். நயினாதீவுக் கோயிலின் வளச்சியிற் கண்ணும் கருத்துமாய் இருந்த இச்சீலர் நயினாதீவு அன்னதானச் சபை மூலம் செய்த தொண்டுகள் பல.

எந்நேரமும் எவர்க்கு உதவியானாலும் ஏற்றிடும் எளிமையாளராகக் காட்சியளிக்கும் செம்மலின் கொடையினால் முன்னேற்றமடைந்த சங்கங்கள் பல, தனி நபர்கள் பலர். தம்மை அண்டினோர்க்கு அபயமளிக்கும் அண்ணலை இழந்து, இன்று தவிர்க்கின்றோம். அவர் விட்டுச் சென்ற இடைவெளியை அவரின் பிள்ளைகள் நிரப்புவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நன்மைக்கு அழிவில்லை.

16

# மனம் நெகிழும் அனுதாபங்கள்

*பேராசிரியர் கா. சிவத்தம்பி*

நண்பர் பூபாலசிங்கம் மறைந்துவிட்ட செய்தி கிட்டிற்று. நம்பவே முடிய வில்லை. வாழ்க்கையின் சில ஓட்டங்கள் இத்தகைய நம்பிக்கையீனங்களிலே தான் தங்கியிருக்கிறது போலும்.

நண்பர் பூபாலசிங்கம் எங்கள் இலக்கிய வாழ்வின் ஓர் அங்கம். யாழ்ப் பாணத்து இலக்கிய வாழ்க்கையில் அவருக்கு முக்கிய இடமுண்டு.

தோழமை நிறைந்த வாழ்க்கையொன்று முடிந்து விட்டது. அந்தரங்க சுத்தியுடன் பழகிக் கொண்டவர்களுக்கு அவர் அன்பின் ஆழம் தெரியும். அந்த நட்புரிமையை அனுபவித்தவன் என்கிற வகையில் நான் அவரது இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாக இருக்கின்றேன்.

இங்கு இருக்கும் பொழுது தெரியாது, நான் யாழ்ப்பாணத்துக்கு வந்து, 751 பஸ்ஸால் இறங்கி, 76 குப் போவதற்கு முன் புத்தகக் கடைக்குள் எட்டிப்பார்க்கும் பொழுதுதான் அந்த வெற்றிடம் எனக்குப் புலப்படப் போகிறது.

குடும்பத்தவர்களுக்கு என் மனம் நெகிழும் அனுதாபங்கள்.

17

# அறிவுப் பசிக்கு உணவளித்தவர்

*பேராசிரியர் க. கைலாசபதி*

அமரர் பூபாலசிங்கத்தின் திடீர் மறைவு இலகுவில் ஈடுசெய்ய முடியாத தொன்றாகும். முற்போக்காளராய் இருந்த அவர் தனது தொழில் மூலமாகவும் பல்வேறு பொதுப்பணிகள் வாயிலாகவும் நமது சமுதாயத்துக்கு அருந் தொண்டாற்றியவர். இக்காலத்திலே அறிவுப்பசிக்கு உணவளிப்பதும் அவசிய மான சமூகசேவையாகும். அதன் முக்கியத்துவத்தை முற்றும் உணர்ந்து செயற்பட்டவர் பூபாலசிங்கம். நூல்விற்பனையை வியாபாரமாக மாத்திரம் கருதாது, பயனுள்ள நூல்களையும் சஞ்சிகைகளையும் இளைய தலைமுறை யினருக்கு எளிதாகக் கிடைக்கும்படி செய்தல் வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் செயற்பட்டவர்.

தன்னளவில் ஒரு அரசியல் இயக்கத்துக்கு விசுவாசியாக இருந்த அதே வேளையில், அறிவு விருத்தியிலும் மனித உறவுகளிலும் குறுகிய வரம்பு களைக் கடந்து அனைவருடனும் இங்கிதமாகப் பழகும் இனிய சுபாவம் படைத்தவராயிருந்தார். வாழும் இலக்கியம் போல மனிதநேயம் தழுவிய மாட்சி அவரிடம் இருந்தது.

இலக்கிய ஆசிரியன் என்ற வகையில் பூபாலசிங்கம் அவர்களுடன் பலகாலமாய்ப் பழகியிருக்கிறேன். இலங்கையிலும் அச்சுத் தொழிலையும் வெளியீட்டு வசதிகளையும் பரவலாக்கி - நல்ல - முற்போக்கான - நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று திட்ட மிட்டுக்கொண்டிருந்தார். அதற்கான ஆரம்பப் பணிகளையும் செய்திருந்தார். அதற்குள் எதிர்பாராத வகையில் மறைந்துவிட்டார். அவரது அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்வதே நாம் ஆற்றக்கூடிய நன்றிக் கடனாகும்.

(16.8.1982, கலைப்பீடம், யாழ். திருநெல்வேலி வளாகம்.)

18

# அறிஞர்கள் புத்தகத்தை நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கியவர்

**கா. கைலாசநாத குருக்கள்**
(இந்து நாகரிகத்துறை, *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*)

அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களை அறியாதவர்கள் மிகச் சிலர். அத்துணைப் பிரசித்திபெற்று யாழ்ப்பாணத்தில் விளங்கினார். புத்தகங்கள், சஞ்சிகைகள் முதலியவற்றை வெளிநாட்டிலிருந்து தருவித்துப் பொது மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச்செய்யும் நோக்குடன் இவர் நடத்திவந்த புத்தக வியாபாரப் பணி அறிஞர்கள் பலர் இவரை நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கியது.

இவர் சமயத்துறையில் கொண்டுள்ள ஈடுபாடு அசாதாரணமானது. நயினாதீவைத் தன் பிறப்பிடமாகக் கொண்ட பூபாலசிங்கம் அவர்கள் சமீபத்தில் நயினாதீவில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நாகபூஷணி அம்பிகையின் திருத்தல வரலாற்று நூல் ஒன்றைத் தகுந்த ஆராய்ச்சியாள ரைக் கொண்டு எழுதுவித்துத் தாமே வெளியிட்டார்.

சமயாபிமானிகளும் நூல்களையே சதா நாடிநிற்கும் அறிஞர்களும் இவரது மறைவை நன்குணர்ந்து கவலையுற்று நிற்கின்றனர். நோய்வாய்ப் பட்டு அதன் விளைவாக நெடுங்காலம் படுக்கையிலழுந்தாது, திடீரென, கடமையாற்றிக் கொண்டிருக்கும்பொழுதே மறைந்தமை எல்லோரையும் பெரிதும் கவலைகொள்ள வைத்தது. இறுதிவரை கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்து எல்லோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இவர் மறைவு பெரும் வேதனையைத் தருகின்றது.

இவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

19

# தமிழ்ப் புத்தக விற்பனைத்துறையில் வரலாறு படைத்தவர்

*க. இ. க. கந்தசுவாமி*
*(கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர்)*

பெரியார் அமரர் பூபாலசிங்கம் அவர்கள் மிக்க தமிழ்ப்பற்று உள்ளவர், சிந்தனையாளர், உழைப்பினால் உயர்ந்தவர், இலட்சிய நோக்கினர், நேர்மையாளர், இலங்கையில் தமிழ்ப் புத்தக விற்பனைத்துறையில் வரலாறு படைத்தவர். அறநெறி உணர்வினர். தம்மை அடைந்த தனியார்க்கும் பொது நிலையங்களுக்கும் தாராளமாக உதவியவர்.

கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடுகளின் விற்பனைக்கு உதவியவர். அவர் இறந்ததற்கு இரண்டொரு வாரங்களின் முன் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்பாக சங்க இலக்கியச் செயலாளரைக் கண்ட போது சங்க நூல்களின் விற்பனைக்கு ஆதரவு தருவதாகக் கூறியிருந்தார். அவரின் மறைவைப் பற்றிப் பத்திரிகையில் பார்த்த போது அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தது. அவரது மறைவு இலங்கைத் தமிழுலகிற்கு நிரப்ப இயலாதது.

அவர் மறைவினால் வேதனையுறும் அவரது மனைவி மக்களுக்கும் உறவினர்களுக்கும், அவரது தாபனத்திற் கடமையாற்றுநர்களுக்கும் தமிழ்ச் சங்கம் மிக்க ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. அவரது ஆன்ம நலத்திற்காகத் தமிழ்ச் சங்கம் அஞ்சலி செய்கிறது.

‘நெருநல் உளனொருவன் இன்றில்லையென்றும் பெருமை உடைத்திவ் வுலகு’ என்பது வள்ளுவனார் வாக்கு. பெரியார் பூபாலசிங்கம் அவர்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

20

# நயினைத் தாயின் அருந்தவப் புதல்வன்

நா. குமாரசூரியர்
(நயினாதீவு விளையாட்டுக் கழகச் செயலாளர்)

வட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், பிரபல வர்த்தகரும், சமாதான நீதவானும், சமூக சேவையாளருமான திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் 21.07.1982 அன்று காலமானது நயினையம்பதிக்கு மட்டுமல்ல, தமிழ் உலகிற்கே ஈடிணையற்ற பெரும் இழப்பாகும். அமுதசுரபியின் ஆரம்ப கர்த்தாவாக, கணேசா சன சமூக நிலைய ஆரம்பகர்த்தாவாக, அபிவிருத்திச் சபையின் தலைவராக, கிராமோதய சபையின் உறுப்பினராக, ஏழைகளின் தொண்டனாக, சமயத் தொண்டனாக இருந்து, நயினையம்பதிக்கு அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்கா. இவர் தனது புத்தகசாலை மூலமாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பல நூல்களைத் தருவித்து வாசகர்களுக்கு நல்ல அறிவினை ஊட்டிய செயல்வீரன்.

தனது வாழ்நாளில் பெரும்பகுதியைப் பொதுத் தொண்டிலேயே செலவிட்ட நயினைத்தாயின் அருந்தவப் புதல்வன் திரு. ஆர்.ஆர். பூபால சிங்கம் அவர்கள், எமது விளையாட்டுக் கழகத்திற்கும் நல்லாதரவு தந்து, வருடம் தோறும் விளையாட்டு விழாக்களைச் சிறப்பித்து வந்துள்ளார். 1980 ஆம் ஆண்டு விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். எல்லா வகையிலும் எமது விளையாட்டுக் கழகத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து எம்மை ஊக்குவித்த பெருமகனாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மாளைப் பிரார்த்தித்து, ஆறாத் துயரில் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது விளையாட்டுக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி

## 21

# உருவாக்கிய சேவைகளினால் அமர வாழ்வு பெற்றவர்

க. வே. பரமலிங்கம் ஜே. பி.

(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் கௌரவ காரியதரிசி)

ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளாட்சிமிக்க நயினைத் தீவகத்துப் பிறந்த திருவாளர் இ. இ. பூபாலசிங்கம் ஜே.பி. அவர்கள் 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே' என்ற இவ்வாக்குக்கமைய பிறந்த ஊருக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியன.

இறப்பின் பின் பிறப்பொன்று இருக்கின்றது என்ற நம்பிக்கை மிக்க சைவசமயத்தின் தத்துவத்தின்படி முற்பிறப்பில் அவர் செய்த - செய்ய விரும்பிய பணிகளை முற்றுப்பெற வைப்பதற்காகவே இப்பூவுலகில் தோன்றி அந்தப் பணிகளைச் சிறப்புடன் செய்து முடித்து இறைபதம் அடைந்துள்ளார்.

அவருடைய கொள்கைகள் யாவும் சமத்துவம், சமதர்மம் என்ற அடிப் படையில் மானிடப் பிறவியெடுத்த அனைவரும் ஆண்-பெண் என்றோ, ஏழை - பணக்காரன் என்றோ, உயர்குலத்தோர்- தாழ்ந்த குலத்தோர் என்றோ, முதலாளி - தொழிலாளி என்றோ இன்னும் பல வர்க்க வேறுபாடுகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் இழிவுபடுத்தி வாழக்கூடாது என்பதாகும்.

பெரும் பெரும் இலாபமீட்டக்கூடிய செய்தொழில்கள் பல இருந்தும் மக்கள் அனைவரும் பயன்பெற்று அதனால் இம்மை மறுமை இரண்டிற்கும் உறுதுணையாக அமையக்கூடிய கல்விப் பணிக்கே உரியதான உத்தம தொழிலைத் தேர்ந்தெடுத்துத் தொழில் என்ற முறையில் மட்டுமன்றி உயர்ந்த சேவையாகவுமே செய்து மகிழ்ந்தார்.

திருவாளர் இ. இ. பூபாலசிங்கம் அவர்கள் உருவாக்கிச் சேவைபுரிந்த பொது நிலையங்கள் பல இருப்பினும் அவற்றில் மிகவும் சிறப்புற்று விளங்குவது 'நயினை ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை' என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

நயினையம்பதியிலே அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருட் கடாட்சம் பெற வரும் பல்லாயிரக்கணக்கான அம்பிகையடியார்களுக்கும், யாத்திரிகப் பெருமக்களுக்கும் என்றும் குறைவின்றி அமுதைச் சுரந்து அளிக்கும் 'அமுதசுரபி' என்னும் மணிமண்டபத்திலே ஆற்றப்படும் (மகேஸ்வர பூசை) அன்னதானப் பணியின் பலனால் அன்னாரின் (திருவாளர் இ.இ. பூபாலசிங்கம் அவர்களின்) ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

22

# மனிதகுல மாணிக்கம்

*வித்துவான் மு. சபாரெத்தினம்*

மணிபல்லவத்திற் பிறந்தவரும் மக்களின் நலனுக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவரும் சமாதான நீதிபதியுமாகிய திரு. ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்களோடு பல்லாண்டுகள் பழகும் பேறுபெற்றேன். எவரோடும் அன்பாகப் பழகும் பண்பும், இனிமையாகப் பேசும் சுபாவமும், சிந்தித்துச் செயலாற்றும் திறமையும் வாய்ந்த அன்பரை இடையிலேயே பறிகொடுத்தமையால் தமிழினமே தத்தளித்த நிலையை நேரில் காணக்கூடிய தாக இருந்தது.

மக்கள் பணி மகேசன் பணியெனக்கொண்டு வாழ்ந்த பெரியார், பிறந்த கமான நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய அன்னதானப் பணியிலும், சோசலிசமே மக்களுக்கு மலர்ச்சியையும், வாழ்வையும் அளிக்கவல்லது என்பதை உணர்ந்து பல தடவைகள் ருஷ்யாவுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வு வளம்பெறப் பணியாற்றி மும்முறை தம் உடைமையான புத்தக சாலை எரிக்கப்பட்டபோதும் மனம் தளராது, தமது இல்லத்தையே நூலகமாக மாற்றியதோடு, தம் குழந்தைகளையும் அதே வழியைப் பின்பற்ற வைத்த பெருந்தகையைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கும், சமூகத்தினருக்கும் தேறுதலளித்து அவர் சென்ற வழியைத் தொடரவைக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க அமரர் பூபாலசிங்கம் நாமம். வளர்க அவர்தம் அன்புக் குழந்தைகள்.

# அறிவுப்பசி தீர்க்கப் புத்தகசாலை அமைத்தார்

**க. கனகராசா ஜே. பி.**
(மில்க்வைற் தொழிலதிபர்)

தொண்டர்கள் பலவிதமானவர்கள், தொண்டுகளும் பலவிதமானவை. தொண்டர்களின் பெருமை சொல்லமுடியாது. பசிப்பிணி போக்க அன்ன சத்திரம், நீர்விடாய் தீர்க்கத் தண்ணீர்ப் பந்தல், அறிவுப்பசி தீர்க்கப் புத்தக சாலை, அமரர் பூபாலசிங்கம் அவர்கள் பல்வேறிடங்களில் புத்தகசாலைகளும், பத்திரிகையாலயங்களும் நடத்தித் தமது தொழில்மூலம் தொண்டு செய்தவர். அவரை அறிஞர் உலகம் என்றென்றும் நினைவிற் கொண்டிருப்பர். அவர் புகழ் வாழ்க. அவர் ஆன்மா சாந்தியடைக.

## 24

# இணையற்ற சேவையாளர்

**வே. கந்தையா ஜே. பி.**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்; முன்னாள் கிராம சபைத் தலைவர்)

வள்ளுவன் வாக்குக்கு அமைவாகத் தோன்றிய பூபாலா, பொதுப் பணியில் அயராது உழைக்கும் சிங்கமே, கல்லாக் கல்விப் பேரறிஞ, கொள்கை இல்லா மனிதன் நீர் நிலையில் மிதக்கும் சருகு ஒப்பான் என்பதை இளமையிலேயே உணர்ந்தாய். மக்களை எல்லாம் சமமாக மதித்துப் பணியாற்றும் சமதர்மக் கொள்கைப் பணி பூண்டாய். அக் கொள்கையாளர் நாட்டுக்கே (ரஷியா) இரு தடவை நேரில் சென்று தரிசித்தும் வந்தாய்.

தீவுப் பகுதி மோட்டார் வள்ளச் சேவைப் பணி பூண்டாய். நயினாதீவு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம், கிழக்கில் காடு, வீடு அமைக்கும் திட்டம் இவற்றின் பணியாள, அம்பாளின் அருள் வேண்டி வரும் அடியார்களின் பசிப் பிணி தீர்க்கும் அமுதசுரபி அன்னதான சபையின் செயலாள,

யாழ் நகர் சென்றாய். அங்கே அறிஞர்கள், சேவையாளர்கள் அறிவுச் சுடர் கொளுத்தும் பணிக்கு உகந்த போற்ற வாழ்ந்தாய். தொழிலாகத் தேர்ந்து புத்தகசாலையை நிறுவினாய். பகைவர் பொறாமைக்கு இலக்காகி அது பல தடவை தீக்கு இரையாக்கப்பட்ட போதும் அஞ்சாது, அயராது நின்றாய். அழிந்தவற்றுக்கான நட்ட ஈடாக ஒரு தொகை உதவப்படும் என்ற செய்தியும் அறிந்தாய், ஆனால் அதையும் பெறு முன்னே அமைந்தது போலும் நின் நெஞ்சம். அன்றொருநாள் (21-07-1982) அயர்ந்தனை, மறந்தனை, விண்ணுலகு ஏகினை என்பது கேட்டு மக்கள் நெஞ்சம் துண்ணென்று இடித்தது.

இணையற்ற சேவையாளரின் பிரிவால் ஏற்பட்ட துயரத்தை விட்டு அவர் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

நின் பணி சிறக்க, நின் புகழ் வளர்க.

09.08.1982

25

# தொண்டனை இழந்து துடிக்கின்றோம்

*கா. க. சிவசிதம்பரம்*

*(நயினாதீவு, முன்னாள் கிராமாதிகாரி)*

திரு. பூபாலசிங்கம் அவர்களை R. R. P. என்று எல்லோரும் அன்பாக அழைப் பார்கள். நயினாதீவிலே பிறந்த இவர் இளமை முதல் ஏதோவொரு சக்தி யினால் உந்தப்பட்டவர் போல எல்லோரையும் தமது ஆகர்ண சக்தியினால் தம் வசப்படுத்தி விடுவார். புரட்சிகரமான எண்ணம் கொண்டவர். புரட்சி, புரட்சி என்று பேசுகின்ற இக்கால இளைஞர்களைப் போல எதற் கெடுத்தாலும் சண்டப்பிரசண்டமாக நடப்பவர் அல்லர். தக்கது இன்னது, தகாதது இன்னது என்பதை அறிந்து பெரியோரைக் கனம் பண்ணி, ஊரோடு ஒத்துப்போகக் கூடிய வகையில் சமூகச் சூழலுக்கு ஏற்ப கீழ்மட்டத்தவரோடும் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு செயற்பட்டு நல்லனவற்றைச் செய்வதில் முனைந்து நிற்பார். கொள்கையில் உறுதியாக நின்று கொண்டு சந்தர்ப்ப சூழல்களைத் தக்கவாறு கையாண்டு லாவகமாகப் பணிகளைச் செய்து வெற்றி காண்பார். இளைஞராக இருக்கையிலே என்னோடும் ஏனைய முற்போக்கான நண்பர்களுடனும் சேர்ந்து கிராம அபிவிருத்திப் பல துறைகளிலும் முனைந்து உழைத்து வந்தார். 'மணிபல்லவதேவி பொதுநிலைக்கழகம், நயினாதீவு அபிவிருத்திச்சபை, தீவுப்பகுதி மோட்டார்சேவை, அமுதசுரபி அன்னதான சபை, ஆலயப்பிரவேசம், பலிநிறுத்தம்' போன்ற பல்வேறு துறைகளிலும் அவர் எம்மோடு தோள் கொடுத்து சேவையாற் றினார்.

இதனால் முன்னாள் யாழ்.அரச அதிபர் மா.ஸ்ரீகாந்தா, திருவாளர்கள் டி.ஆர்.ஓ. சிவஞானம், டி.ஆர்.ஓ. செல்லத்தம்பு, டி.ஆர்.ஓ. கந்தையா இன்னும் பல பொதுநலத் தொடர்பு அதிகாரிகளின் பெரும் மதிப்பையும் பெற்றார். ஊர்ப்பற்றும், இனப்பற்றும், தேசியப்பற்றும் ஒருங்கிணைந்து அவரிடம் காணப்பட்டன. அவரை மனமார நேசிக்காத ஊரவரே இல்லை யெனலாம். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தாலும் - ஊரிலே அவர் பங்குபற்றாத கலை நிகழ்ச்சிகளோ விழாக்களோ இல்லையெனலாம். அன்றியும் தன்னாலான பொருளுதவியும் நல்கி நல்ல காரியங்களுக்கு எப்போதும் கை கொடுத்து எல்லோரினதும் நம்பிக்கைக்கும், நன்மதிப்பிற்கும் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

அவரது இறுதி யாத்திரையின் போது பங்கு பற்றிய மக்கள் வெள்ளமே சான்றுபகரும். அவருடைய வாழ்க்கை வரலாறு வளர்ந்து வரும் எமது இளைஞர் சமுதாயத்திற்கும், நயினாதீவை விட்டுக் குடிபெயர்ந்து வெளி இடங்களில் வாழும் ஊரவர்க்கும் ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும் என நான் விரும்புகின்றேன். அவருடைய ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல எம்பிராட்டி நயினை நாகபூசணி அம்மனை பிரார்த்திக்கின்றேன்.




அக்கினிச் சுவாலையில் அழிந்து நிமிர்ந்த பூபாலசிங்கம் புத்தகசாலையின் பொலிவுறு தோற்றம்

## 26

# வாருங்கள் முதலில் அதைச் செய்வோம்

**வி. ஆர். கே. இரத்தினசபாபதி**

*(நயினாதீவு தெற்கு, கிராமோதய சபைத் தலைவர்)*

நயினாதீவில் சமதர்மத்துக்கு வித்திட்ட பெருமகன், மூடக்கொள்கைகளை உடைத்தெறிய, போதனைகளும் சாதனைகளும் நிகழ்த்திய புரட்சியாளன். சாதிப்பேயை ஓடஓட வெருட்டிய பூசாரி. பொதுநல சேவையே தனது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட தொண்டன். சமூகத்தின் அடித் தளத்தில் உள்ளவர்களுடனும் மேல்மட்ட மனிதர்களுடனும் ஒரே சீராகப் பழகிய பண்பாளன். காலம் சென்ற ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களை நினைக்கும்போது எனது உள்ளத்தில் பீரிடும் எண்ணக்கருக்கள் இவைகளே.

ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைக்காத எந்தவொரு ஸ்தாபனமும் நயினாதீவில் இல்லை. அவர் பங்குபற்றாத எந்த வைபவமும் இல்லை. அவர் ஆதரவு அளிக்காத எந்த நல்ல இயக்கமும் இல்லை. பிற்போக் காளருக்கு அவர் ஒரு சிம்ம சொப்பனம். உறவு, பந்தம், பாசம் இவற்றை யெல்லாம் தள்ளி வைத்து நீதிக்காகப் போராடியவர் அவர். இளைஞர்களுக்கு ஒரு துருவ நட்சத்திரமாக அவர்கள் நேரிய வழியிற் செல்வதற்கு வழிகாட்டி யவர். இளைஞர்களுக்கு மாத்திரம் அல்ல பெரியவர்களுக்கும் தான். ஒருவரது கொள்கைகளைக் கண்டிக்கும்போது அக்கொள்கை கொண்டவர் மேல் பற்றும், பாசமும் வைத்திருக்கும் உயரிய பண்பாளர் அவர். எதிரி ஒருவர் நல்ல காரியம் ஒன்றைச் செய்யும்போது அதைப் போற்றிப் பாராட்டும் உளப் பண்பைக் கண்டு நான் பூரிப்படைந்த சந்தர்ப்பங்கள் பல. சொந்தக் கோப தாபங்களைப் பொது ஸ்தாபனங்களுக்குள் காவிச் செல்லும் ஈனத்தனம் அவரிடம் எப்பொழுதுமே கிடையாது.

தொன்னூற்றொன்பது ரூபாவை நூறு ரூபாயாக்கி பெட்டியில் பூட்டி வைக்கும் சமதர்மவாதிகளைக் கண்டிருக்கின்றேன். ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் அத்தகையர் அல்லர். தரும வழியில் பொருள் தேடி இவைகள் எல்லாம் ஏழைகளுக்கே உரியது என்று எண்ணி வாழ்ந்தவர். சாதி ஒழிக என்று கூட்டங்களில் சிங்கம்போல் கர்ச்சித்துவிட்டுச் சொந்த வீட்டில் சாதிப் பேய்க்குக் கொலுவிட்டு ஊஞ்சல் ஆட்டும் அசிங்கமான அரசியல்வாதிகள் பலரை நான் கண்டிருக்கின்றேன். ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள்

அத்தகைய வெளிவேஷக்காரர் அல்லர். நல்லதைச் சொல்வார், சொல்வதைச் செய்வார். நேற்று ஒரு கட்சி, இன்று இன்னொரு கட்சி, நாளைக்கு எந்தக் கட்சியில் சேரலாம் என்று யோசித்து மண்டையை உடைக்கும் அரசியல்வாதி அல்லர். ஆர்.ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஒரு கொள்கைப் பிடிப்பாளர்.

நல்ல நினைவு; நல்ல பேச்சு; நல்ல செயல். இதுவே அவர் பண்பு. தீர்க்காயுசாக வாழவேண்டும் என்று நாம் நினைப்பவர்கள் இடைநடுவில் போய்விடுகிறார்களே. இது ஏன் என்று தெரியவில்லை. அவரது ஆத்மா சாந்தியடைக என்று எல்லோரையும் போல நான் பிரார்த்திக்கப்போவதில்லை. உலகில் எப்பொழுது 'சாந்தியும் சமதர்மமும்' நிலைபெறுகிறதோ அப் பொழுதுதான் அவரது ஆத்மா சாந்தியடையும். அந்நிலையை உலகம் அடைய நாம் பாடுபடுவோம். வாருங்கள் அதை முதலிற் செய்வோம். அதுவே அன்னாருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்.

(நன்றி: 'உயர்திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் ஜே.பி. நினைவுமலர்', 1982)

### தோழர் R. R. பூபாலசிங்கம் J. P அவர்கள் ரஷ்யா சென்று வந்தமையைப் பாராட்டி நயினைப் பொதுமக்கள் அளித்த

## வரவேற்புபசாரப் பத்திரம்

### ஆக்கம்: ஷண்

இரு இராமர் செய்த தவப் பேற்றின் நோக்கும்
இரு நாதர் ஈட்டியநல் அறத்தின் வாழ்வும்
பெருமாது நாகர் மகள் பொன்னி நல்லாள்
பூண்டபெரு மனத்திண்மைப் பொலிவும் இந்தத்
திரு நாடு நயினையிற் பிறந்த பேறும்
தேவியுமை நாகம்மை கடைக்கண் நோக்கும்
வருமாறு அழைத்ததுவோ சோவியத்து
வளநாடு வந்துதித்த நண்பா வாழி. *(1)*

கடல் நடுவே மணிநாகர் கலங்கொண் டோச்சி(க்)
கண்ட பெரும் வளம் சுரக்க(க்) காலந்தோறும்
திடல் நடுவே நாகம்மை கோயில் கொண்டு
திருவருளும் பிறநலமும் சுரக்க வேண்டி
அடல் ஏறு நிகர் இளைஞர் சான்றேர் தோன்ற
அன்னையருள் சுரந்திட்ட நயினை நாடு
புகழ் ஏடு தாங்கிற்றுப் பூபால் நின்னைப்
புறந் தந்த பெருமையதே பெருமை வாழி *(2)*

மண்சுரக்கும் பூக்கல்லும் சங்கும் வேப்ப
மர இலையும் மற்றுமுள பொருட்கள் யாவும்
விண் சுரக்கும் பொருளாக விரும்பி அன்பர்
வேண்டுதலும் பணிதலுமாய் விதிர்த்து விம்மி
கண் சுரக்கும் கண்ணீரால் நனைத்துப் போற்றி(க்)
காமுறுதல் காட்சியெனில் இந்த நாட்டின்
பண்சுரக்கும் மனிதர்களைப் பாரே போற்றும்
பான்மையது பெரிதாமோ பூபால் வாழி. *(3)*
எது உடைமை ஏதுடைமை எவர்க்கு மெல்லாம்
இங்குடைமை என்றெண்ணி(க்) கொள்கை நாட்டி(ப்)
பொது உடைமை ஆக்கி இந்தப் புவிவாழ் வென்றும்
புகழுறவும் மகிழ்வுறவும் புனித சேவை(ப்)
பண்புடைமை அஃதொன்றே பணியாய்க் கொண்டு
பாரில் வளர் இயக்கமதைப் பற்றி நின்று

தனியுடைமை தகர்த்தெறிய நின்றாய் தோழா
தமிழர் பெரு நெறியுமதே கண்டாய் வாழி. *(4)*

சோவியத்து நாட்டிலே மக்கள் வாழ்வு
சுவர்க்கமெனப் புகழ்பாடிச் சொன்னாய் தோழா
மேவியொத்து மக்களினம் மிளிரும் போது
மேன்மையுறும் புவி வாழ்வு மேலும் மேலும்
பாவிகளா(ப்) பிறர் நலியப் பார்த்து வாழும்
பான்மையது மண்மீது இல்லை யென்றால்
தாவி வரும் மோட்சமது புவிமீ தென்றே
தமிழ் நெஞ்சம் கண்டதடா தமிழா வாழி. *(5)*

பகுத்துண்டு பல்லுயிர்கள் ஓம்பும் வாழ்வும்
பகைமையிலா அமைதிநிறை பரந்த பண்பும்
மிகுந்திங்கு தமிழொடுநம் சைவமோங்க
மிளிந்தது காண் அழிந்தது நம் மடைமையாலே
தொகுத்திங்கு தமிழர் அடை கதவு தட்டி(த்)
தோழர் படை வெளிப்பட்டுத் தொண்டு செய்து
புகுத்துங்கால் புத்துணர்வு பொங்கிப் பாயும்
புகழ்ப்பணியைப் பூபால் நீ செய்து வாழி. *(6)*

பல்லினமும் பலநாடும் பாரில் ஒன்றிப்
பான்மையொடு பண் பட்டுப் பகைமை நீங்கி
நல்லினமாய் நட்புரிமை நாளும் காத்து
நாம் பெறுவ தத்தனையும் நாடித் தேடி
எல்லவர்க்கும் தேவைக்காய் இனிது தந்து
இரந்துண்ணல் இல்லையென மார்பு தட்டி
வல்லவராய் மனிதகுலம் மண்ணில் வாழ
வகையுண்டு நெறியுண்டு வளர்ப்போம் வாழி. *(7)*

24.12.1972

(நன்றி: ‘உயர்திரு ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஜே.பி. நினைவுமலர்’, 1982.)